Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 238 | சனிக்கிழமை | ஆடி 8 ஆம் நாள் 24 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

26.7.2021
திங்கட்கிழமை
உதயனோடு
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்
வெளியாகும்.
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

## கொரோனா சாவு 4,000 +

கொழும்பு, ஜூலை 24
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்தைக் கடந்துள்ளது. கொரோனாத் தொற்றால் மேலும் 43 பேர் உயிரிழந்துள்ளனர் என்று 19

## இரண்டு மாதங்களில் நாட்டில் பெரும்பஞ்சம்!

*அரசால் அதைத் தடுக்க முடியாதுபோகும் வங்கித்துறையும் வீழ்ச்சியடையுமென ஆரூடம்*

கொழும்பு, ஜூலை 24
"இலங்கையில் இன்னும் இரண்டு மாதங்களில் நிச்சயம் பஞ்சம் ஏற்படும். தற்போதைய ஆட்சியாளர்களால் அதனைத் தடுத்து நிறுத்த முடியாத நிலைமையே ஏற்படும்." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட 19

## இதுவரை 68 பேருக்கு 'டெல்டா'

கொழும்பு, ஜூலை 24
"மிக வேகமாகப் பரவக்கூடிய கொரோனாவின் 'டெல்டா திரிபு வைரஸ் தொற்றுடன் இலங்கையில் இதுவரை 68 பேர் அடையா 19



## தொற்று 1,785

கொழும்பு, ஜூலை 24
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 1,785 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று 19

## பரவும் வேகத்திலும் பாதிப்பிலும்

# கொரோனா வைரஸைவிட டெல்டா 1000 மடங்கு வீரியம்

கொழும்பு, ஜூலை 24
சாதாரண கொரோனா வைரஸின் செறிவைவிட, டெல்டாவின் செறிவு ஆயிரம் மடங்கு அதிகமாக உள்ளது" என்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மருத்துவர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை விடுத்துள்ளார். 19

## யாழிலும் வவுனியாவிலும் தொற்றால் இரு சாவுகள்

வவுனியா, ஜூலை 24
யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் கொரோனாத் தொற்றால் தலா ஒவ்வொருவர் நேற்று உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 78 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று உயிரி 19

## சமாதான நீதிவான் விண்ணப்பத்தில் தமிழுக்குத் தடை!

*நீதியை மறுத்த நீதிஅமைச்சு*

கொழும்பு, ஜூலை 24
சமாதான நீதிவான் (ஜே.பி.) பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு இனிமேல் தமிழ் மொழியில் விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்ய முடியாது என்று அறிவித்த அரசு, விண்ணப்பத்தை சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் மாத்திரம் நிரப்ப முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளது. 19

## வாந்தி எடுத்த இளைஞன் சாவு

கொடிகாமம், ஜூலை 24
உணவு உட்கொண்டபோது வாந்தி எடுத்த இளைஞர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதே 19

இந்தியா வசமுள்ள

## எண்ணெய்க் குதங்களை மீளப்பெற தொடர் பேச்சு

கொழும்பு, ஜூலை 24
"இந்தியா வசமிருக்கும் இலங்கையின் எண்ணெய்க் குதங்களில் 24 குதங்களை மீண்டும் பெற்றுக்கொள்ள இந்தியாவுடன் தொடர்ச்சியாகப் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம்" என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
நாட்டில் தற்போது மக்களின் பயன்பாட்டுக்குத் தேவையான எரிபொருள் தாராளமாக உள்ளது என்றும், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் உறுதியளித்தார். 19

## ஓட்டோவுக்கு தீ மூட்டிய வாள்வெட்டுக்குழு

*அராலியில் அராஜகம்*

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணம் அராலி வடக்கில், நேற்றுமுன்தினம் இரவு வீடு புகுந்த வாள்வெட்டுக்குழுவினர், வீட்டு ஜன்னல்களின் கண்ணாடிகளை அடித்து உடைத்ததோடு, முச்சக்கரவண்டிக்குத் தீ மூட்டிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் இரவு 10.45 அளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வாள்கள் மற்றும் இரும் 19

## ஜேர்மனியில் பெருவெள்ளம் மீசாலை நபர் பரிதாபச் சாவு

கொழும்பு, ஜூலை 24
ஜேர்மன் நாட்டை உலுக்கிய பெரும் வெள்ளப் பெருக்கில் சிக்கி, அங்கு வசிக்கும் ஈழத் தமிழரான மீசாலையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை ஏலம் விடுவதை குடும்ப ஆட்சியாளர்கள் உடன் நிறுத்தவேண்டும்

**தலைமன்னார், ஜூலை 24**

**“குடும்ப ஆட்சியானது, இந்த நாட்டை வெளிநாடுகளுக்கு ஏலம்விடும் நிலையை உடன் நிறுத்தவேண்டும். வடக்கில் தொடர்ந்து திட்டமிடப்பட்ட நிலையில் நில அபகரிப்பு இடம்பெற்று வருகின்றது. இது பௌத்தமயமாக்கலுக்கு அடிகோலுகின்றது. அதுமட்டுமன்றி, இலங்கையில் ஊடக சுதந்திரம் நசுக்கப்பட்டு ஊடகவியலாளர்கள் அச்சறுத்தப்படுகின்றார்கள். இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்” என்று அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தெரிவித்தார்.**

கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தினர் மன்னாரில் நேற்று நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

எங்கள் நாடு பூராகவும் பெரும் பிரச்சினைகளாகக் காணப்படுகின்ற விடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளிலே வாழும் மக்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கையை கொண்டுசெல்ல முடியாது தவிக்கின்றனர்.

அத்தியாவசிய பொருள்களுக்கு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான முடிவு இன்னும் கிடைக்கப்பெறாத நிலை தொடர்கின்றது.

கொரோனாவை காரணம்காட்டி ஜனநாயக போராட்டங்களை அரசு நசுக்குகின்றது. கொத்தலாவல பல்கலைக்கழக சட்டத்தை மீளப்பெற வேண்டியுள்ளது. இது எமது கல்வித் துறைக்கே பாதிப்பாக உள்ளது.

தற்பொழுது பரபரப்பாகப் பேசப்படும் ஹிஷாலினியின் இறப்பில் நீதியான விசாரணை வேண்டும். அதுமட்டுமன்றி, விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் எட்டப்படவேண்டும். எங்கள் பகுதிகளில் வெளிநாட்டவர்களால் மேற்கொள்ளப்படும் கடலட்டையால் எமது மீனவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. வடக்கில் தொடர்ந்து திட்டமிடப்பட்ட நில அபகரிப்பு இடம்பெற்று வருகின்றது. இது பௌத்தமயமாக்கலுக்கு அடிகோலுகின்றது - என்றார். (த-60)

# முஸ்லிம் அரசியல்வாதிகள் மக்களைக் குழப்புகின்றனர்

## கலையரசன் எம்.பி. விசனம்

கல்முனை, ஜூலை 24

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கும் விடயத்தில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களை குழப்புகின்றனர். இதனாலேயே தமிழ் பேசும் மக்களிடையே பிரிவு ஏற்பட்டுள்ளது” என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மீனவர்களின் படகுகளிலிருந்து ஆழ்கடலில் வைத்து களவாடப்படும் மீன்கள், சுருக்குவலைகள் தொடர் பில் மாளிகைக்காடு கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மீனவர்களுட னான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது ஜனநாயகத்துக்காக, நீதிக்காக போராடுவது. மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு நிச்சயமாக தீர்வை பெற்றுத்தருவார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ் பேசும் இனம் எனும் அடிப்படையில் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் இருப்பு சம்பந்தமாகவும் தற்போதய பல விடயங்கள் சம்பந்தமாகவும் நாடாளுமன்றத்திலும் சர்வதேசத்திலும் எடுத்துகூறி வருகின்றோம். ஆனால் முஸ்லிம் அரசியல்வாதிகள் அதற்கு தடையாக உள்ளனர் - என்றார். (த-இ)



# ‘தூய அழகிய நகர’மாக மாறவுள்ள யாழ்.ஆரியகுளம்

யாழ்ப்பாண மாநகர முதல்வரின் ‘தூய அழகியநகரம்’ திட்டத்தின் ஒரு பகுதியாக ஆரியகுளம் துரித அபிவிருத்தித்திட்ட ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனின் முயற்சியால், தியாகி அறக்கொடை நிதியத்தின் வாமதேவா தியாகேந்திரனுடைய நிதி அனுசரணையில் குறித்த குளமும் அதன் அயல் பகுதிகளும் சீரமைத்து அழகுபடுத்தப்படவுள்ளது.

அங்குரார்ப்பண நிகழ்வின் நினைவாக செயற்றிட்டத்தை விளக்கும் பதாகை ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், மாநகர ஆணையாளர், தியாகி அறக்கொடை இயக்குநர் வாமதேவா தியாகேந்திரன், மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர பொறியியலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். (த-20)

# மர்மப் பொதியால் வவுனியாவில் பரபரப்பு

வவுனியா, ஜூலை 24

வவுனியா நகரில் காணப்பட்ட மர்மப் பொதியால் பதற்றநிலை ஏற்பட்டதுடன், விசேட அதிரடிப்படையினரின் குண்டுசெயலிழக்கச் செய்யும் பிரிவினர் வருகைதந்து சோதனை நடத்தினர்.

வவுனியாவில் அமைந்துள்ள கொப்பேகடுவ சிலைக்கு முன்பாக நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை கலவரத்தை நினைவு கூர்ந்தும், இனப்படுகொலைக்கு நீதிவேண்டியும் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

போராட்டம் முடிவடைந்து சிறிது நேரத்தில் குறித்த பகுதியில் இருந்த கொப்பேகடுவ சிலைக்கு முன்பாக இராணுவ சீருடையில் தயாரிக்கப்பட்ட பை ஒன்று காணப்பட்டது. இதனை அவதானித்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸார் குறித்த மர்ம பொதிக்கு அருகில் எவரும் செல்லாதவாறு கடமையில் ஈடுபட்டனர்.

அதன்பின்னர், விசேட அதிரடிப் படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரை வரவழைத்து, சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்போது குறித்த சிலை அருகில் இருந்த வர்த்தக நிலையங்கள் சிறிதுநேரம் மூடப்பட்டன. கண்டி வீதி ஊடான போக்குவரத்தும் சுமார் 20 நிமிடங்கள் தடைப்பட்டது. குறித்த பொதியை குண்டு செயலிழக்க செய்யும் கருவியின் உதவியுடன் சோதனை செய்தபோது, குறித்த பொதியில் கோவில் ஒன்றின் துண்டுப் பிரசுரங்களும், அதிர்ஷ்டலாப சீட்டு ரிக்கற்றுகளும், வேறு தாள்களும் காணப்பட்டன. அதிரடிப்படையினர் அவற்றை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துச் சென்றனர். பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (த-18)

# இலங்கை வங்கிக்கு சென்றவர்களின் கவனத்துக்கு!

கிளிநொச்சி, ஜூலை 24

பளை இலங்கை வங்கிக்கு கடந்த ஒரு வாரமாக சென்றுவந்தவர்கள் சுகாதார துறையினரைத் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பிரதேசத்தில் இயங்கிவந்த இலங்கை வங்கி கிளையில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் 6 ஊழியர்களுக்கு கொவிட் 19 தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதால், வங்கி முழுமையாக மூடப்பட்டுள்ளது. எனவே, கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் வங்கிக்கு சென்றுவந்தவர்களைத் தொடர்புகொள்ளுமாறு பளை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் கோரியுள்ளனர். (த-6)

# மாகாண பொதுப்போக்குவரத்து முதலாம் திகதி மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 24

மாகாணங்களுக்கு இடையிலான பஸ் மற்றும் ரயில் போக்குவரத்து சேவைகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

“மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து ஆரம்பிக்கப்படாவிட்டாலும் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பஸ் மற்றும் ரயில் சேவைகளை ஆரம்பிக்க கொரோனாத் தடுப்புத் தேசிய செயலணி அனுமதியளித்துள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடை நீக்கப்பட்டதும், முழுமையான போக்குவரத்து வசதிகளை வழங்குவோம்.

சிலவேளை மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் தடை நீடிக்கப்பட்டாலும், சில பஸ்களுக்கு போக்குவரத்தில் ஈடுபட சந்தர்ப்பமளிக்கப்படும்” என்றார்.

கொரோனா பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான பஸ் மற்றும் ரயில் பொதுப் போக்குவரத்து சேவைகள், கடந்த ஜூலை 14 ஆம் திகதி முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அத்தியாவசிய சேவைகளுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

புதிய கொரோனா திரிபுகள் கிராமங்களுக்குச் செல்வதை தடுக்கும் நோக்கில், மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பிலுள்ள 30 வயதுக்கும் மேற்பட்டவர்களில் பெரும்பாலானோருக்கு இரு வாரங்களுக்குள் தடுப்பூசி செலுத்தி முடிப்பதன் அடிப்படையில், மீண்டும் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்தை ஆரம்பிக்க முடியும் என்று கொரோனாத் தடுப்புத் தேசிய செயலணி கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறுப்பு ஜூலை நினைவு: யாழில் நீதி கோரி கவனவீர்ப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 24**

**ஈழத் தமிழர்கள் மீதான சிறிலங்கா அரசின் இனப் படுகொலைக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி யாழ் மத்திய பஸ் நிலையம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

கருப்பு ஜூலையை நினைவுகூர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலை நாள், அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய வேண்டும், இன அழிப்புக்கு நீதி வேண்டும், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே, வெளியேறு இராணுவமே வெளியேறு என்பவை உள்ளிட்ட பல்வேறு கோசங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர். போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொது அமைப்புகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-20)

# விசேட சுற்றிவளைப்பில் 9 பேர் கோப்பாயில் கைது

கோப்பாய், ஜூலை 24

கோப்பாய் பொலிஸ் பிரிவில் நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் காலை 6 மணிவரை முன்னெடுக்கப்பட்ட சிறப்பு சுற்றிவளைப்புத் தேடுதலில் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் மூவர் அண்மைய வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர். யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகேயின் வழிகாட்டலிலும் அவரது பங்கேற்புடனும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பங்களிப்புடன் இந்த சிறப்பு சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 9 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் 22 ,23 மற்றும் 25 வயதுடைய மூவர் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. ஏனைய 6 பேரும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-26)




# கறுப்பு ஜூலையை நினைவுகூரும் சுவரொட்டிகள் கிழித்தெறியப்பட்டன

## தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை விசனம்

யாழ்ப்பாணம். ஜூலை 24

கறுப்பு ஜூலையை நினைவு கூரும் வகையில் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அனைத்தும் இரவோடு இரவாக பொலிஸ், இராணுவம் மற்றும் புலனாய்வாளர்களால் முற்றுமுழுதாக கிழித்தெறியப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை "ஜனநாயக நாட்டில் அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளை நினைவு கூருவதற்கு இலங்கை அரசு தடை போடுகின்றது என்றால் இங்கு ஜனநாயகம் எங்கு உள்ளது.

இலங்கை அரசின் மிலேச்சத்தனமான இச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றது. (ப-26)




# கறுப்பு ஜூலை தினத்தில் மன்னாரிலும் கவனவீர்ப்பு

மன்னார், ஜூலை 24

கருப்பு ஜூலையை முன்னிட்டு 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரிலும் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மௌன கவனவீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வாயை கறுப்பு துணியால் கட்டியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எரிபொருள் விலையை அதிகரிக்காதே, விவசாயிகள், கடற்றொழிலாளர்களுக்கு மானியம் வழங்கு, ஏழைகளை வஞ்சிக்காதே, அத்தியாவசிய பொருள்களுக்கு விலை அதிகரிக்காதே, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு விரைந்து முடிவு சொல், ஜனநாயகப் போராட்டங்களை நசுக்காதே, கொரோனாவைக் காட்டி பொய் வழக்குப் போடாதே, கொத்தலாவல பல்கலைக்கழக சட்டவரைபை மீளப்பெறு, ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதியான விசாரணை வேண்டும். விவசாயிகளின் உரம் மற்றும் மருந்து பிரச்சினைக்கு தீர்வு வழங்கு, சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அகற்று, எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்காதே, சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு, அப்பாவி தமிழ் இளைஞர்களை கைது செய்யாதே, குடும்ப ஆட்சியில் நாட்டை வெளிநாடுகளுக்கு ஏலம் போடாதே, வடக்கில் திட்டமிட்ட நில அபகரிப்பை நிறுத்து பௌத்த மயமாக்கலை திணிக்காதே, ஜனநாயகத்துக்கு மதிப்பளி, ஊடக அடக்குமுறையை நிறுத்து, அரைகுறையாக உள்ள வீட்டுத்திட்டங்களை நிறைவு செய் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் தமிழ்த்து தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன், உறுப்பினர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மதத்தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர் . (ப-56)



கறுப்பு ஜூலை நினைவேந்தல் யாழ்ப்பாண மாநகரசபையில் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது. (ஐ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கொத்தலாவல பல்கலை சட்டவரைவு நடைமுறைக்கு வர இடமளியோம்

## ஜே.வி.பி. திட்டவட்டம்



கொழும்பு, ஜுலை 24
கொத்தலாவல பல்கலைக் கழக சட்டவரைவு கிழித் தெறியப்படும்வரை எமது போராட்டம் தொடரும் என்று ஜே.வி.பி. உறுப்பினர் கே.டி.லால்காந்த நேற்று கூறுரைத்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
இலவசக்கல்வியை பாதுகாக்கவே நாம் போராடுகின்றோம். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் கொத்தலாவ சட்டவரைவு கிழித்தெறியப்பட வேண்டும். அதுவரை போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை. எதிர்ப்புகளுக்கு மத்தியில் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால்கூட அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்க மாட்டோம். சைட்டத்தையும் இவ்வாறுதான் நிறைவேற்றினர். வீதியில் இறங்கி போராடினோம். இறுதியில் அதனை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. மக்களுக்கு வெற்றி கிடைத்தது. இதுவிடயத்திலும் அவ்வாறு நடைபெறும்- என்றார். (ஒ.44)






# கிளிநொச்சி மருத்துவமனையில் இரு நோயாளர் விடுதிகள் திறப்பு

**கிளிநொச்சி,ஜுலை 24**

**கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் அமைக்கப்பட்ட இரு நோயாளர் விடுதிகள் மக்கள் பயன்பாட்டுக்காக நேற்று கையளிக்கப்பட்டன.**

எஸ்.கே அறக்கட்டளையின் நிறுவுநர் எஸ்.கே. நாதனின் 55 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட இரு நோயாளர் விடுதிகளே இவ்வாறு கையளிக்கப்பட்டன.
மருத்துவமனைப் பணிப்பாளர் எஸ்.சுகந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்பாசன பொறியியலாளர் என்.சுதாகரன், வவுனியா மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் எஸ்.ராகுலன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.
சுமார் 27.5 மில்லியன் செலவில் என்பு முறி சிகிச்சைகளுக்கான மருத்துவ விடுதி மற்றும் 27.5 மில்லியன் செலவிலான கண் சிகிச்சை மருத்துவ விடுதி ஆகியவை இவ்வாறு திறந்துவைக்கப்பட்டன. (ஐ-6)

# காலியில் இருவருக்கு டெல்டா திரிபு வைரஸ்?



கொழும்பு,ஜுலை 24
காலி பத்தேகம பிரதேசத்தில், டெல்டா திரிபு வைரஸ் தொற்றுடன் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும் எத்தகைய வைரஸ் என்று இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.
இவர்கள் இருவரும் ஆடைத் தொழிற்சாலையொன்றின் ஊழியர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதையடுத்து, அவர்களுடன் தொடர்பைப் பேணிய 30 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பத்தேக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.
தொற்றாளர்கள் இருவரும், பத்தேகம வடக்கு மற்றும் திலக உதாகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# ஒரே தடவையில் இரு டோஸ்கள்

*பாதிப்பில்லை என்கிறார் இராஜாங்க அமைச்சர்*



கொழும்பு,ஜுலை 24
கொரோனாத் தொற்றைத் தடுக்கின்ற தடுப்பூசிகள் இரண்டையும் ஒரே தடவை பயன்படுத்தினால் எந்த ஆபத்தும் ஏற்படாது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.
கண்டி உடப்பேராதனையைச் சேர்ந்த பெண் ஒருவர், தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் ஒரே தடவை பெற்றுக்கொண்டதால் மயக்கமுற்று மருத்துவனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.
இது தொடர்பில் விளக்கமளித்த இராஜாங்க அமைச்சர், தடுப்பூசி டோஸ்கள் இரண்டையும் ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்வதால் எவ்விதமான ஆபத்தும் ஏற்படாது - என்றார். (ஒ.4)

# தகவல் அறியும் ஆணையத்தின் பதவிக்காலம் முடிவடைவு

கொழும்பு,ஜுலை 24
தகவல் அறியும் ஆணையத்தின் பதவிக் காலம் இரண்டு மாதங்களில் முடிவடைகிறது.
தகவல் அறியும் ஆணையத்தின் பதவிக் காலம் ஒக்ரோபர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகிறது என்று தகவல் அறியும் ஆணையத்தின் உறுப்பினர் ஜி.எஸ்.புஞ்சிஹேவா உதயனுக்குத் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கத்தினர் வவுனியாவில் மாபெரும் ஆர்பாட்டம்



வவுனியா,ஜுலை 24
அதிபர்,ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை உடனடியாகத் தீர்க்குமாறு கோரி அதிபர்,ஆசிரியர் தொழிற்சங்கத்தினரால் மாபெரும் ஆர்பாட்டம் ஒன்று வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி, அங்கிருந்து மணிக்கூட்டு சந்தியை அடைந்து, மீண்டும் பழைய பஸ் நிலையப் பகுதியை அடைந்தது.
ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "ஆசிரியர் உழைப்பை சுரண்டாதே தரமான இலவசக் கல்வியை விற்காதே, கொத்தலாவல சட்ட வரைபை கிழித்தெறி" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கருத்து தெரிவிக்கையில்,
"ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதாக அரசாங்கம் சொல்லிக்கொண்டாலும் அதனை தீர்ப்பதற்கான எந்தவித நடவடிக்கையையும் அரசு இதுவரை முன்னெடுக்கவில்லை. இதனால் எமது வாழ்க்கைச் செலவு மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கல்விக்கு 6 வீதம் நிதி ஒதுக்கீட்டை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
இதேவேளை ஜோன் கொத்தலாவல இராணுவ பல்கலைக் கழக சட்டமானது கல்வித்துறையில் இராணுவத் தலையீடுகளை ஏற்படுத்துகின்ற அபாயநிலையை ஏற்படுத்தியுள்ளது. அது உடனடியாக நிறுத்தப்படுவதுடன், கல்வியை தனியார் மயப்படுத்துவதை நிறுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம்" - என்றனர். (ஐ-110)



# நாடுகளுக்கு ஏற்ப தடுப்பூசி தெரிவு

*தொழில் அமைச்சு நடவடிக்கை*

கொழும்பு,ஜுலை 24
வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்காகச் செல்பவர்களுக்கு, அவர்கள் செல்லவுள்ள நாடுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படும் என்று தொழில் உறவுகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.
சைனோஃபோர்ம் தடுப்பூசியைப் பெற்றுள்ள வெளிநாட்டுப் பணியாளர்களை, தமது நாடுகளுக்குள் அனுமதிப்பதில்லை என்று மத்திய கிழக்கின் சில நாடுகள் தீர்மானித்துள்ளன.
இதனால் குறித்த நாடுகளில் அனுமதி வழங்கப்பட்டுள்ள தடுப்பூசியை தமக்கு வழங்குமாறு, அந்த நாடுகளுக்கு தொழில்வாய்ப்புக்காகச் செல்ல எதிர்பார்த்துள்ளவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.
அதனடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிஷாலினி மரண உணர்வலைகள் காலப்போக்கில் ஓய்ந்துபோகக்கூடாது

## மூத்த சட்டத்தரணி ஸ்ரீகாந்தா வலியுறுத்து




**யாழ்ப்பாணம், ஜுலை 24**

**மலையகத்தைச் சேர்ந்த சிறுமி ஹிஷாலினியின் சோக மரணம் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி, மனிதாபிமான உணர்வுகொண்ட அனைவரின் மனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சோகச் சூழ்நிலையின் உணர்வலைகள் காலப்போக்கில் ஓய்ந்து போய்விட அனுமதிக்கக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

சுதந்திர இலங்கையின் முதல் வருடத்திலேயே, குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக மாற்றப்பட்ட மலையகத் தமிழர் சமூகம், அதன்பின் 15 வருடங்கள் கழித்து இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக, மந்தைகள் போல பிரித்து பங்கீடுசெய்யப்பட்ட வரலாற்றுத் துரோகத்தின் பின்னணியில், அதன் ஒரு பகுதியினருக்கு வழங்கப்பட்ட குடியுரிமை மற்றும் வாக்குரிமையோடு சமீபகாலமாக எழுச்சி பெறத் தொடங்கியுள்ளது. ஆயினும், மலையகத் தமிழர் மத்தியில் தொடர்ந்து நிலவும் கடுமையான தொழிற் தட்டுப்பாடு, போதிய ஊதியமின்மை உட்பட்ட பொருளாதார பிரச்சினையே இந்தக் கோர மரணம் நிகழ்ந்த சூழ்நிலையின் அடிப்படைக் காரணமாக உள்ளது.

கல்வி கற்க வேண்டிய வயதில் கொழும்பு உட்பட தொலைதூர இடங்களில், தனியார் வீடுகளிலும், உணவு விடுதிகள், வியாபார நிறுவனங்கள் போன்றவற்றிலும் பணியாளர்களாக வேலைக்கு அமர்த்தப்படும் மலையகப் பிள்ளைகள் பல்வேறு அவலங்களுக்கு ஆளாகும் கொடுமையான சூழ்நிலைக்கு முடிவுகட்டப்படுவதன் மூலம், இந்த சோக மரணத்தை நிரந்தர அர்த்தம் கொண்டதாக நாம் அனைவரும் மாற்றி அமைக்க முன்வர வேண்டும்.

இந்த மரணம் தொடர்பான புலன் விசாரணைகளை தொடர்ந்து ஊன்றி அவதானித்து, அவை உரிய முறையில் விரைந்து முன்னெடுக்கப்படுவதன் மூலம் குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு நீதியின் முன்நிறுத்தப்பட்டு, தண்டிக்கப் படுவதை உறுதிப்படுத்துவது எவ்வளவு அவசியமானதோ, அதே போல, வெளிச்சத்துக்கு வராமல் மூடி மறைக்கப்பட்ட இத்தகைய பல குற்றங்களுக்கு அடித்தளம் அமைத்திருக்கும் சமூக பொருளாதார சூழ்நிலையை முற்றுமுழுதாக மாற்றி அமைப்பதில் அக்கறையுள்ள அனைவரும் ஆர்வத்தோடு இணைந்து செயற்படுவது இன்றைய கட்டாயத் தேவையாக உள்ளது- என்றுள்ளது. (ப-26)

# பஸ் மோதியதில் சிறுவன் படுகாயம்

முல்லைத்தீவு, ஜுலை 24

தனிமைப்படுத்தலை நிறைவுசெய்தவர்ளை ஏற்றிச்சென்ற பஸ் மோதியதில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்

இந்தச் சம்பவம் நேற்று முல்லைத்தீவு உண்ணாப்பிலவு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் இருந்து தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவர்களை ஏற்றிச் சென்ற பஸ் உண்ணாப்பிலவு பகுதியில், மிதிவண்டியில் பயணித்த சிறுவனை மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. படுகாயமடைந்த சிறுவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

விபத்து தொடர்பில் முல்லைத்தீவு வீதிப்போக்குவரத்து பொலிஸாரால் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். (ப-19)





# மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு,ஜுலை 24

முல்லைத்தீவு மாவட்ட கொரோனா சிகிச்சை நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளின் சுகாதார செயற்பாட்டுக்கு 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு கிளையால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம்,உமாசங்கரிடம் குறித்த உபகரணங்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன. ஒட்சிசன் செறிவூட்டிகள், பாதுகாப்பு முகக்கவசங்கள் மற்றும் தனிநபர் பாதுகாப்புக் கவசங்கள் உட்பட பல பொருள்கள் இதன்போது வழங்கப்பட்டன.

நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவை சங்க முல்லைத்தீவு கிளை தொண்டர்கள், செயலாளர் செ.சிவராஜா, நிறைவேற்று அதிகாரி க.நிதர்சன், மருத்துவர் சத்தியரூபன் மற்றும் உதவி மாவட்டச் செயலர் திருமதி.எல்.கேகிதா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-19)



# 40 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

முல்லைத்தீவு,ஜுலை 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமுழமுனை மற்றும் உடுப்புக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இ.கவாஸ்கரின் வேண்டுகோளின் அடிப்படையில் கனடா நாட்டைச் சேர்ந்த கவின் மற்றும் காவியா சகோதரர்களின் நினைவாக இவ் உணவுப்பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-13)

# கோத்தா அரசு நினைத்தால் பிரச்சினையைத் தீர்க்கலாம்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 24


தற்போதைய அரசு நினைத்தால் ஒரே இரவில் ஒரே மேசையில் தமிழர்களுடைய பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் காணலாம். ஏனையவர்களை விட இவர்களுக்கே அதிக பொறுப்பு உண்டு என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

2009ஆம் ஆண்டு போரை நடத்தி முடித்த இன்றைய அரசு 2015 வரை ஆட்சியில் இருந்தது. அந்த நேரத்தில் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி தமிழ் மக்களின் மனதில் இடம்பிடித்திருக்க வேண்டும். அதை அன்றைய அரசு செய்யத் தவறிவிட்டது. அதன் பிறகு 2015ஆம் ஆண்டு சிறுபான்மை மக்களின் பேராதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றி 2020 வரை தேசிய அரசு என்ற போர்வையில் நடந்த நல்லாட்சியிலும் தமிழர் தரப்பின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்த அரசின் பிரதான எதிர்கட்சியாக இருந்து ஒவ்வொரு (பட்ஜெட்) வரவு செலவுத் திட்டத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு தெரிவித்தும், அந்த நல்லாட்சியும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவில்லை. மீண்டும் போர் நடத்திய தரப்பு ஆட்சிபீடம் ஏறியுள்ளது. அதுவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச குடும்பத்தைச் சார்ந்த அங்கத்தவர்கள் ஜனாதிபதி,பிரதமர், நிதியமைச்சர் மற்றும் மிக பல முக்கிய பொறுப்புக்களிலும் உள்ளார்கள். அவர்கள் நினைத்தால் ஒரே இரவில் ஒரே மேசையில் இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் காணலாம். ஏனையவர்களை விட இவர்களுக்கே அதிக பொறுப்பு உண்டு. ஏனெனில் போரை நடத்தியவர்கள் இவர்களே. ஒரு நாட்டில் தனது குடிமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்தும், போர் நேரத்தில் அதனை செய்யத் தவறிவிட்டது என பலராலும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், போரில் நடந்த அனர்த்தங்களுக்கு பொறுப்பேற்று அதற்கு பரிகாரமாக தமிழ் மக்களின் பிரச்சினை களை இந்த அரசு தீர்த்து வைக்க வேண்டும். அதேபோல் எஞ்சியுள்ள அரசியல் கைதிகளும் விடுதலைசெய்யப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நான் அன்று தொட்டு இன்று வரை வலியுறுத்தி வரும் இந்திய முறையிலான ஒரு அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் -என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகளுக்கு உதவியவர் ஸ்டாலின்

## மதுர எம்.பியின் கண்டுபிடிப்பு



**கொழும்பு, ஜூலை 24**

**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடந்த காலங்களில் உதவியவர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்டாலின் உண்மையில் இலங்கை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீதோ, கல்வி மீதோ கரிசனை கொண்ட வரல்ல. கடந்த போர்க் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் கொழும்புக்கு வருவதற்காக, வீதித்தடைகளை நீக்கச்சொன்ன ஒரு பயங்கரவாதி. இப்போதும் அவர் பயங்கரவாதச் செயற்பாட்டையே செய்கின்றார். அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து நிதியையும், வரப்பிரசாதங்களையும் பெறுகின்றவர்.

கடந்த வாரம் பெற்ற தகவல்களைக் கொண்டு, பயங்கரவாத விசாரணைப் பிரிவிடம் விரைவில் சென்று தகவலளிக்கவுள்ளேன்-என்றார். (ஓ.4)

# வீதியைச் சீரமைக்கக் கோரி வீதியில் இறக்கவேண்டுமா?

*கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் கேள்வி*

கிளிநொச்சி, ஜூலை 24

முக்கொம்பன் வழியான பஸ் சேவை இடம்பெறாமைக்கு அரசியல்வாதிகளும் அதிகாரிகளுமே பொறுப்பேற்க வேண்டும் என கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் சுந்தரமூர்த்தி தயாபரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் செல்லும் வீதியைச் சீரமையுங்கள் என கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் தொடர்ச்சியாக நானும் இப்பகுதி பொது அமைப்புகளும் முறைப்பாடுகளைச்செய்து வந்திருக்கின்றோம். அரசியல்வாதிகள் வீதியை வந்து பார்த்தார்கள். சீரமைப்போம் என வாக்குறுதிகளை வழங்கினார்கள். ஆனால் சீரமைப்புகள் இடம்பெறவில்லை. பத்தாண்டுகளாக இலங்கை போக்குவரத்துச் சபை மிகுந்த அர்ப்பணிப்புடன் தனது சேவையை வழங்கி வந்திருக்கின்றது. தற்போது வீதி மோசமாகச் சேதமடைந்திருப்பதால்,போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பத்தாண்டுகளில் ஒரு நான்கு கிலோமீற்றர் வீதியை சீரமைக்க முடியாத நிலையில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இருப்பது கவலைக்குரியது. இவர்கள் பின்தங்கிய கிராமங்களைப் புறக்கணிக்கின்றார்கள். பஸ் சேவை நடைபெறுவதற்கு முதற்கட்டமாக இயந்திரம் மூலம் தற்காலிக சீரமைப்பை ஒரு நாளில் மேற்கொள்ள முடியும்.

அவ்வாறு இடம்பெற்றால் பஸ் சேவை நடத்த முடியும். பஸ் சேவை பாதிப்புகள் மட்டுமல்ல குறித்த வீதியால் அறுவடை இயந்திரங்களை வயலுக்குக் கொண்டு செல்ல முடியாது உள்ளது. நெல் மூடைகளை வீடுகளுக்கு எடுத்துவர முடியா துள்ளது. இந்நிலையில் வீதியின் சீரமைப்பு தற்போது இடம்பெறும் என்ற நம்பிக்கை எம்மிடம் இல்லை. வீதியைச் சீரமையுங்கள் என வீதியில் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

விவசாயிகளையும் பொதுமக்களையும் இணைத்து ஆர்ப்பாட்டத்தின் மூலம் மக்களின் நெருக்கடியை எல்லோருக்கும் வெளிப்படுத்த உள்ளோம்- என்றார். (ப13)



# பஸ் சேவை திடீர் இடைநிறுத்தம்: கிளிநொச்சியில் மக்கள் அவதி

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்துக்கு நடைபெற்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் ஒரேயொரு பஸ் சேவை கடந்த 18ஆம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஸ்கந்தபுரத்துக்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான நான்கு கிலோமீற்றர் வரையான வீதி குன்றுங்குழியுமாக மாறியதன் காரணமாகவே பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், அக்கராயன், ஸ்கந்தபுரம், கோணாவில், கண்ணகைபுரம், அம்பலப்பெருமாள்குளம், அமைதிபுரம், கோட்டைக்கட்டிய குளம் மற்றும் முக்கொம்பன் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

# முறைப்பாடு வழங்கப்பட்டும் நடவடிக்கை எடுப்பதில்லை

## முள்ளியவளைப் பொலிஸார்மீது பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை 24

முள்ளியவளை பொலிஸாரிடம் முறைப்பாடுசெய்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் செல்வராஜா ரஜிதா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பூதன்வயல் கிராமத்தின் கமக்கார அமைப்பில் பொருளாளராக நான் உள்ளேன். எமது கிராமத்தில் நெல் உலரவிடும் தளம் ஒன்று உள்ளது. குறித்த தளத்தில் கடந்த ஆண்டு கணுக்கேணி கிழக்கைச் சேர்ந்த நபரொருவர் நெல்லை மூன்று நாள்கள் உலரவிட்டிருந்தார்.

மூன்று நாள்களுக்கும் ரூபா 3 ஆயிரம் செலுத்த வேண்டிய நிலையில் அவர் அதைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறாத நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லை உலர விடுகிறார் என அறிந்தேன்..

பொருளாளர் என்ற வகையில் உலர விடும் தளத்துக்குச் சென்றபோது குறித்த நபர் நெல்லை தளத்தில் உலர விட்டிருந்தார். கடந்தாண்டு பணம் செலுத்தாததால் நெல்லை தளத்தில் உலரவிடுவது பொருத்தமில்லை என நான் தெரிவித்தேன். குறித்த நபர் மதுபோதையில் இருந்ததுடன் தகாத வார்த்தைகளால் என்னை பேசி, தலைக்கவசத்தால் தாக்க வந்தார். அது தொடர்பாக முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாடு செய்தேன். ஆனால் முள்ளியவளைப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த காலங்களிலும் மூன்று தடவைகள் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் நான் அளித்த முறைப்பாடுகளுக்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது வேதனைக்குரியது- என்றார். (ப-13)



# முல்லைக் கடற்கரைகளில் மரக்கன்றுகளை நடுங்கள்

## கரைதுறைப்பற்று சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 24

முல்லைத்தீவு கடற்கரையில் மரங்கள் நடுகை செய்யப்படுவது அவசியமானது என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி. இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு கடற்கரையில் மரக்கன்றுகளை நடுகைசெய்வதன் மூலம் க டல் சீற்றங்களின் போது இயற்கையான பாதுகாப்புக் கிடைக்கும்.

முல்லைத்தீவு கடற்கரைக்குச் சுற்றுலாப் பயணிகள் வருகைதருவதன் காரணமாக இயற்கையான நிழல் கிடைக்கும். இதனைவிட 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் போது கடற்கரையில் மரங்கள் இல்லாததன் காரணமாக முல்லைத்தீவில் தாக்கம் கூடுதலாக அமைந்திருந்தது. ஆழிப்பேரலையின் பின்னர் முல்லைத்தீவு கடற்கரையில் மரங்கள் நடுவதன் அவசியம் உணரப்பட்டு அதற்கான திட்டங்களும் கூட்டங்களும் நடத்தப்பட்டன. போர்ச் சூழல் காரணமாக மர நடுகைக்கான வாய்ப்புகள் உருவாகவில்லை. தற்போது முல்லைத்தீவு கடற்கரை மற்றும் நகரம் என்பவற்றில் பெருமளவிலான மரக்கன்றுகளை நடுவதன் மூலம் இயற்கை சீற்றங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம். கடற்கரை, நகரச் சூழல் வளம் பெறும் - என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஜனாஸாக்களும் ஹிஷாலினியும்!

முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் எரிகாயங்களுடன் மீட்கப்பட்டு, சிகிச்சை பயனளிக்காமல் இறந்துபோன சிறுமி ஹிஷாலினிக்கு நீதி கிட்ட வேண்டும் என்று இலங்கைத் தீவெங்கும் அதிர்வலைகள் ஏற்பட்டுள்ளன.


ஹிஷாலினி தற்கொலைக்குத் தூண்டப்பட்டாரா?, பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டாரா?, சித்திரவதை செய்யப்பட்டாரா? இவ்வாறான கேள்விகளும் சந்தேகங்களும் பூதாகரமாக நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில், உயிரிழந்த சிறுமியின் சாவுக்கு உச்சக்கட்ட நீதியைப் பெறுவதற்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் ஏன் பெருமளவான சிங்கள மக்களும்கூட ஓரணியில் ஒன்றுதிரண்டிருப்பது பாராட்டப்பட வேண்டியதுதான்.

எனினும், நீதியை நோக்கிய இந்தப் போராட்டத்தில் முஸ்லிம்களின் வகிபங்கு மிகக் குறைவே. இந்தத் தயக்கம், கள்ள மௌனம் ஏன்? எதற்காக? என்பது புரியவேயில்லை. இடம்பெற்றுவரும் போராட்டம் ஒன்றும் அரசியல் ரீதியானதோ அல்லது குறைந்த பட்சம் அரசியல் சார் போக்குடையதோ இல்லை. முழுக்க முழுக்க ஓர் அவலச் சாவுக்கான நீதிதேடிய பயணம் இது. இதில் பங்காளிகளாக இருக்க வேண்டியது முஸ்லிம்களின் தலையாய கடமையுமாகும்.

கோத்தாபய அரசு கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்குப் பதிலாக, முஸ்லிம்களின் மத நம்பிக்கைகளை நிந்தனை செய்து எரியூட்டியபோது இலங்கைத் தீவெங்கும் பல்வேறு போராட்டங்கள் வெடித்தன. வெறுமனே முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் ஏராளமான தமிழர்களும், சிங்களவர்களும் அந்தப் போராட்டத்தில் தம்மை இணைத்து ஜனாஸா எரிப்புக்கு ஒரு முடிவைக் கண்டனர். முஸ்லிம்களின் தார்மீக உரிமைக்கான குரல் வெற்றிபெற்றது. அந்த ஜனாஸாக்களுக்கான போராட்டம்போல் ஏன் ஹிஷாலினி விடயத்தில் முஸ்லிம்கள் கொதித்தெழவில்லை என்ற கேள்வி எழுவது இங்கே நியாயமானது.

ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டதைப் போன்று நாளை வேறுவிடயத்தில்வேறுவடிவத்தில்முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படலாம். அப்போது சகோதர இனக்குழுமங்களின் ஆதரவு அவர்களுக்குத் தேவைப்படலாம். இத்தகையதொரு சிந்தனையை ஒட்டுமொத்த முஸ்லிம்களும் மனதில் இருத்தி ஹிஷாலினியின் இறப்பு விவகாரத்தை அணுக வேண்டும். 'அநீதிக்கு எதிராக கள்ள மௌனம் சாதிப்பதும்கூட நீதி மறுப்புத்தான்' என்பார்கள். எனவே கள்ள மௌனத்தைக் கலைத்து நீதிக்கான போராட்டத்தில் முஸ்லிம்களும் தம்மை இணைக்க வேண்டும்.

அதேநேரம் ஹிஷாலினிக்கு நீதிகோரி எழுந்துள்ள இந்த உணர்வலை, வெறுமனே ஹிஷாலினிக்கு மட்டுமானதாக இருந்துவிடக் கூடாது. குறைந்த ஊதியத்துக்கு மலையகத் தமிழர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு அவர்களின் உடல் உழைப்புச் சுரண்டப்படுவதற்கு எதிராகவும், சிறுவர் தொழிலாளர்களின் இன்னல்களுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப் படுபவர்களுக்கு காத்திரமான சட்டம் நடைமுறைப் படுத்தப்படும் வகையிலும் இந்தப் போராட்டங்கள் விரிவுபட வேண்டும். அப்போதுதான் ஹிஷாலினியின் ஆத்மா சாந்தியடையும். அதுதான் நாம் அவளுக்குச் செய்யக்கூடிய ஆகப்பெரும் கடமையும் ஆகும்.




# அரசின் நாடகம் அம்பலம் ஐக்கிய மக்கள் சக்தி தகவல்



**கொழும்பு, ஜூலை 24**

**அரசின் நாடகத்தை அம்பலப்படுத்தவே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டது. இதன்படி அரசுக்குள் அரங்கேறிய நாடகம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டமைக்கான பொறுப்பையேற்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலக வேண்டும் என்ற யோசனையை சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசமே ஆரம்பத்தில் முன்வைத்தார். அதாவது நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு முன்னரே மொட்டுக் கட்சியின் செயலாளர் கொண்டுவந்துவிட்டார் என்றே கூறவேண்டும்.

அதுமட்டுமல்ல பஸில் ராஜபக்ச நாட்டில் இருந்திருந்தால் எரிபொருள்களின் விலையை அதிகரிக்க இடமளித்திருக்கமாட்டார் என இராஜாங்க அமைச்சர்கள் சிலர் கருத்து வெளியிட்டுவந்தனர். இவை நாடகம் என்பது எமக்கு தெரியும். அவர்கள் மனச் சாட்சியின் பிரகாரம் செயற்படுகின்றனரா என்பதை பரிசோதிக்கவே பிரேரணை முன்வைத்தோம். ஆனால் ஆளுங்கட்சியினரின் நாடகம் தெளிவானது. மக்களுக்கும் புரிந்தது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் மற்றும் உரத் தட்டுப்பாடு உள்ளிட்ட விவகாரங்களின்போதும் எதிர்ப்பு இருப்பது போல நாடகம் இடம்பெற்றது. பிரேரணை தோற்கும் என்பது எமக்கு தெரியும். இவர்களின் நாடகத்தை மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டியுள்ளோம். எனவே, எமது நோக்கமும் வெற்றி - என்றார். (ஓ.44)

# ஆசிரியர்களுக்கு தடுப்பூசி கட்டாயம்


## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஜூலை 24

பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றிருப்பது கட்டாயம் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தடுப்பூசி பெறாதவர்களுக்கு கல்வி அமைச்சு உடனடியாக தகவல் வழங்கும். அத்துடன் பணிபுரியும் வலய அலுவலகத்துக்கும் தகவல் வழங்கப்படும்.

எனவே அத்தகையவர்கள் உடனடியாக கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.



அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு தற்போது மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் பிரதம செயலர் நியமனத்தை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். வலியுறுத்து

கிளிநொச்சி, ஜூலை 24

வடக்கின் பிரதம செயலாளர் நியமனத்தை மீள்பரிசீலனை செய்து, தமிழர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று ஈ.பி. ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு மாகாண பிரதம செயலாளராக வவுனியா மாவட்டச் செயலராக இருந்த ஒரு சிங்கள இனத்தவர் நியமனம் பெற்றிருக்கின்றார். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 95 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் தமிழ் பேசும் மக்களாக உள்ளனர். வடக்கு மாகாணத்தினுடைய அரச கரும மொழியாக தமிழ் மொழியும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் பிரதம செயலாளர் பதவியை வகிக்கக்கூடிய ஒருவராக 12க்கும் மேற்பட்ட சிரேஸ்ட அரச நிர்வாக சேவைகள் உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள். இவ்வளவும் இருக்கத்தக்கதாக மிகவும் யூனியரானவரும் இளவயதுடையவருமான ஒரு சிங்கள அரச நிர்வாக சேவை உத்தியோகத்தரை வடக்கு மாகாணத்துக்கான பிரதம செயலாளராக நியமனம் செய்வதென்பது பொருத்தமற்றது.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. முக்கியமாக வடக்கு மாகாணத்திலிருந்து 51 பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் என்ற பெயரில் மத்திய அரசு பறிப்பதற்கான சூழல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில், ஒரு சிங்களவரை பிரதம செயலாளராக நியமனம் செய்வதென்பது நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயமாகும். இன்னும் சொல்லப் போனால் அவருக்கு தமிழை எழுதவோ வாசிக்கவோ தெரியாத சூழ்நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் அவருக்கு சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ கடிதம் எழுத வேண்டிய சூழ்நிலையும் இல்லாவிட்டால் அவர் உடனடியாக அதை வாசித்து அறிந்து கொள்ள முடியுமா என்ற பல்வேறான பிரச்சினைகளை இந்த நியமனம் என்பது உருவாக்கியிருக்கின்றது.

அரசு தான் விரும்பியதைச் சாதிப்பதற்கு இவ்வாறான நியமனத்தை கருவியாகப் பாவிக்கும் என்பதையும் நாங்கள் நம்புகின்றோம். இந்த நியமனம் என்பது மீள்பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். இந்த நியமனம் மீளப் பெறப்பட்டு தகுதிவாய்ந்த தமிழ் பேசக்கூடிய ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும் - என்றார். (ப-113)



## சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றுங்கள்

***துணுக்காய் சபை உறுப்பினர் கோரிக்கை***

முல்லைத்தீவு, ஜூலை 24

சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு கொவிட் - 19 தடுப்பூசி முதன்மை ரீதியில் ஏற்றப்பட வேண்டும் என துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் ச. சுயன்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி ஏற்றப்படவில்லை என்ற குறைபாடு தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு கொவிட் - 19 பரவக் கூடிய அபாய நிலை காணப்படுகின்ற நிலையில், தடுப்பூசியை முதன்மைப்படுத்தி ஏற்றுவதால் அவர்களுடைய பாதிப்பும் குடும்பங்களின் பாதிப்பும் உறுதி செய்யப்படும். எவ்வளவு தடைகள் வந்தாலும் சுத்திகரிப்பு பணியாளர்கள் வீடுகளில் இருப்பதில்லை. பணிகளை அர்ப்பணிப்புடன் செய்து வரும் நிலையில் தடுப்பூசியை முதன்மைப்படுத்தி ஏற்றவேண்டும். எனவே தடுப்பூசிகளை தங்களுக்கு ஏற்றுமாறு தொடர்ச்சியாகக் கோரிவரும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு உடனடியாக தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும் - என்றார். (ப-13)

# எதிர்க்கட்சிகளுக்கு பொதுவான தலைவர்

## ரணில் புது வியூகம்

கொழும்பு,ஜூலை 24

**நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகளுக்கு பொதுத் தலைமைத்துவம் வழங்கும் வகையிலான, கலந்துரையாடல்களை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க முன்னெடுக்கவுள்ளார்.**



அதன் முதற்கட்டமாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளை அவர் அடுத்த வாரம் சந்திக்கவுள்ளார்.

அதனடிப்படையில் நாடாளுமன்றச் செயற்பாடுகள் மற்றும் ஜனநாயக விழுமியங்கள், பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி பொது நிகழ்ச்சி நிரல் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

இதனை மையப்படுத்தி அனைத்து எதிர்க்கட்சிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

"ஆளும் கட்சியின் கிராமிய மட்டத்திலான தலைவர்கள் அரசு மீது கடந்த காலங்களில் விரக்தி நிலையைக் கொண்டிருந்தனர். ஆனால் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிக்கொள்ளப்பட்ட பின்னர் அந்த நிலைமை மாறியுள்ளது. இதனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தெரிவித்துள்ளனர். மறுபுறம் பல துறைகளிலும் வீழ்ச்சியைக் கொண்டிருந்த அரசுக்கு நாடாளுமன்றில் அதிகாரம் உள்ளமை வாக்கெடுப்பு முடிவுகளால் அறியமுடிந்தது.

எனவே அனைவரும் ஒன்றிணைய வேண்டியது அவசியம். அதனடிப்படையில் பொது தலைமைத்துவம் ஒன்றின் கீழ் நாடாளுமன்றத்தில் ஒன்றிணைந்து எதிர்க்கட்சிகள் செயற்பட வேண்டும்" என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (ஒ,4)

## பல்லவராயன்கட்டின் உவர்ப் பாதிப்பை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்குக

### கிராம மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி - பூநகரி பல்லவராயன்கட்டு கிராமத்தின் உவர்ப் பாதிப்பை இல்லாது ஒழிக்க மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தில் முழுமையாக உவரடைந்த கிராம அலுவலர் பிரிவாக பல்லவராயன்கட்டு காணப்படுகின்றது. 2000ஆம் ஆண்டில் பல்லவராயன்கட்டு கிராமம் உவரடைய உள்ளது என்ற தகவல் வெளியிடப்பட்ட போதிலும் போர்ச் சூழல் காரணமாக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாக தற்போது இக் கிராமம் முழுமையாக உவரடைந்து மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர். இந்நிலையில் பூநகரியின் கரியாலைநாகபடுவான் குளம், பல்லவராயன் கட்டுக்குளம் ஆகிய குளங்களின் நீர் மழை காலங்களில் கடலைச் சென்றடைகின்றது. இந்த நீரை உவரடைந்த நிலப்பரப்பில் தேக்கி வைப்பதன் மூலம் உவர் நிலம் நன்னிலமாக மாறுவதற்கான வாய்ப்புகள் உருவாகும். முன்னாள் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் தி.இராசநாயகம் பூநகரியின் உவரடைந்த நிலப்பரப்புகளில் மண் அணைகள் அமைத்து மண் அணைகளில் சவுக்கு மரக் கன்றுகளை நட்டு மழை நீரைச் சேமித்து உவர் நிலப்பரப்பை நன்னிலமாக மாற்றுவதில் வெற்றி பெற்றிருந்தார். இதே போன்று பல்லவராயன்கட்டு கிராமத்திலும் இரு குளங்களின் நீரையும் சேமித்து வைப்பதன் மூலம் பல்லவராயன்கட்டு கிராமத்தின் உவர் நிலம் நன்னிலமாக மாறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதற்கான நடவடிக்கையை மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (ப-13)

## சட்டவிரோத மணல் அகழ்வு: கிளிநொச்சியில் கலந்தாய்வு

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டரீதியற்ற மணல் அகழ்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பாதுகாப்பு படையினர், துறைசார் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் சட்டவிரோத மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களால் வீதிகள் சேதமடைதல் மற்றும் விவசாய நிலங்கள் சேதமடைதல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை பொலிஸ் காவலரண்கள் ஊடாக மணல் ஏற்றிச்செல்லும் வாகனங்கள் மாவட்டங்களுக்குள் நுழையும்போது பரிசோதிக் கப்படுவதில்லை என்ற குற்றச் சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன. (ப-113)

# சீன நிறுவனத்தின் கடல் அட்டை பண்ணை 2016 ஆம் ஆண்டே அமைக்கப்பட்டுள்ளதாம்

## கூறுகின்றார் யாழ். மீனவர் சம்மேளன உபதலைவர்

கிளிநொச்சி, ஜூலை 24

அரியாலையில் அமைக்கப்பட்ட கடல் அட்டைக் குஞ்சு உற்பத்திப் பண்ணை 2016ஆம் ஆண்டு அமைக்கப்பபட்டது. எனினும் அந்த இடம் கடலட்டை குஞ்சுகளை உற்பத்திசெய்வதற்கு பொருத்தமாக இல்லாமையாலேயே தற்போது அந்த கடலட்டை பண்ணை பூநகரிக்கு மாற்றப்பட்டுள்ளது என வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும் யாழ். மாவட்ட மீனவர் சம்மேளன உப தலைவருமான நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

"கடல் அட்டைக் குஞ்சு உற்பத்தி நிலையம் வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் மட்டுமே உள்ளது. அதனை யாரும் குழப்ப வேண்டாம். மக்களுக்கான வாழ்வாதாரத்துக்காக வடக்கில் இயங்காமலுள்ள காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஆகியவற்றை இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-113)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அதிபர், ஆசிரியர்களுக்கு உடனடியாக தடுப்பூசி வழங்குங்கள்

## தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

**வவுனியா, ஜூலை 24**
**வவுனியா கல்வி வலய ஆசிரியர்கள், அதிபர்களுக்கான தடுப்பூசி உடனடியாக வழங்கப்படவேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;
வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. ஆனால் வவுனியா கல்வி வலயத்தில் இதுவரையில் தடுப்பூசி ஏற்றப்படவில்லை. இந்நிலையில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாடசாலைகளுக்கு அழைத்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது கண்டிக்கத்தக்கது. வவுனியா மாவட்டம் பல்வேறு பிரதேசங்களோடு நேரடியாகத் தொடர்பில் உள்ள பிரதேசமாகும். இங்கு தடுப்பூசி உடனடியாக ஏற்றப்படவேண்டும் என்றனர். இந்த நிலையில் அடுத்து வரும் தடுப்பூசி தொகுதிகளில் வவுனியா அதிபர், ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என சம்பந்தப்பட்டவர்களால் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (ப)



யாழ்ப்பாணம் அனலைதீவு நயினாகுளம் ஐயனார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ-9)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 24
மோட்டார் சைக்கிளும் வானும் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார். இந்த விபத்து சாவகச்சேரி நுணாவில் ஏற்றத்தடியில் கடந்த புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. இதில் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## காயமடைந்த மூவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜூலை 24
வீதி விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளன. கைதடி வடக்குப் பகுதியில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கி வீழ்ந்ததில் அப்பகுதியைச் சேர்ந்த 19 மற்றும் 22 வயதுடைய இருவர் காயமடைந்தனர். மந்துவில் கிழக்குப் பகுதியில் வீதியால் நடந்து சென்ற 25 வயதுடைய இளைஞனை மறைந்திருந்து இனந்தெரியாதோர் தாக்கியதில் அவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## ஹிஷாலினிக்கு நீதி வேண்டி கையெழுத்துப் போராட்டம்

வவுனியா, ஜூலை 24
நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப் பெண்ணாக இருந்த ஹிஷாலினி என்ற சிறுமிக்கு நீதிவேண்டி வவுனியாவில் கை எழுத்துப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.
சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஏற்பாட்டாளர்கள்,
ஹிஷாலினியின் உயிரிழப்புக்கு நீதி வேண்டி குறித்த கை எழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். நாடு முழுவதும் சிறுவர், சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.
அவர்கள் பணிசெய்யும் பகுதிகளில் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். குறிப்பாக ஹிஷாலினியின் உயிரிழப்புடன் தொடர்புபட்டவர்கள் தண்டிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்படவேண்டும்- என்றனர்.
குறித்த கையெழுத்து பிரதிகள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ-110)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு சூம் வகுப்புக்கள்

சாவகச்சேரி, ஜூலை 24
தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகினரால் இவ்வருடம் வாழ்வாதார திட்டம் வழங்கப்படவுள்ள பயனாளர்களுக்கு இணையவழி (zoom ) ஊடாக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திட்டத்துக்கான தொழில்நுட்ப அலுவலர்களால் இந்த வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.
கடந்த புதன்கிழமை திட்டத்துக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கும், நேற்றுமுன்தினம் மாட்டுத்தொழுவம் மற்றும் ஆட்டுத் தொழுவம் ஆகியவை அமைப்பது தொடர்பான வகுப்புக்களும் நடத்தப்பட்டன. (ஐ-9)

## வன்னேரிக்குளம்- ஜெயபுரம் வீதி சீரமைப்பு; மாவட்டச் செயலர் நேரில் ஆராய வேண்டும்

### கரைச்சி சபை உறுப்பினர் வலியுறுத்து

கிளிநொச்சி, ஜூலை 24
வன்னேரிக்குளத்தில் இருந்து ஜெயபுரம் வரையான வீதியின் சீரமைப்பை கிளிநொச்சி மாவட்டச் செயலர் நேரில் வந்து பார்வையிடவேண்டும் என்று கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் நா.செல்வநாயகம் வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 63 ஆண்டுகளுக்குப் பின்னர் நான்கு மாதங்களுக்கு முன்னர் அக்கராயனில் இருந்து வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, வேரவில், பொன்னாவெளி வரையான வீதியின் புனரமைப்புகள் நடைபெற்று வருகின்றன. வீதியின் சீரமைப்புகளின் தொடக்கத்திலே குறித்த சீரமைப்புகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன. சிவப்பு கிரவலுக்கு பதிலாக தரமற்ற வெண்கிரவல் பயன்படுத்தப்படுகின்றது என்று கிளிநொச்சி மாவட்டச் செயலாளருக்கு கடிதத்தின் மூலம் நேரடியாக முறைப்பாடுகள் செய்திருந்தோம். அக்கராயனில் இருந்து வன்னேரிக்குளம் முருகன் கோவில் வரை கூடுதலாக சிவப்பு கிரவல் பயன்படுத்தப்பட்டு வீதி சீரமைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் வன்னேரிக்குளம் முருகன் கோவிலில் இருந்து ஜெயபுரம் வரையான மழை காலத்தில் கூடுதலாக வெள்ளம் தேங்குகின்ற வயல் நிலங்கள் சூழ்ந்த ஈரழிப்பான நிலப்பரப்பில் தரமற்ற வெண் கிரவல்கள் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எமது சூழலில் தரமான சிவப்புக் கிரவல் காணப்படும் நிலையில் தரமற்ற வெண் கிரவல் பயன்படுத்தப்பட்டு வன்னேரிக்குளத்துக்கும் ஜெயபுரத்துக்கும் இடையில் வீதி சீரமைக்கப்படுவது பொருத்தமற்றது.
சீரமைக்கப்பட்டு சிறிய காலத்திலேயே வீதி சேதமடையக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.
இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் நேரடியாக வந்து வீதியை பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி வன்னேரிக்குளம் மக்கள் சார்பாக வேண்டுகின்றேன்.
ஆசிய அபிவிருத்தி வீதி வேலைத் திட்டத்தில் வீதி வேலைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக மக்கள் முறைப்பாடுகள் செய்யலாம் என்பதன் அடிப்படையிலேயே இத்தகவலை மாவட்டச் செயலாளரின் கவனத்துக்குத் தெரியப்படுத்துகின்றேன் -என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்களால் பலவீனமடையோம்

## அரச தரப்பினர் இறுமாப்பு



**கொழும்பு,ஜூலை 24**

**போராட்டங்களை நடத்தி, அரசை பலவீனப்படுத்த முடியாது. பிரச்சினைகளுக்கு பேச்சுக்கள் ஊடாகவே தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட ஒரு சில தொழிற்சங்கத்தினர் அரச சார்பற்ற அமைப்புக்களின் தேவைகளுக்காக செயற்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டது. நல்லாட்சி அரசின் காலத்தில் ஆசிரியர், அதிபர் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வுகாண எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும், போராட்டங்களையும் தொழிற்சங்கத்தினர் முன்னெடுக்கவில்லை. ஆனால் நாம் அதிபர், ஆசிரியர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்க எதிர்பார்த்துள்ளோம்- என்றார். (ஒ.4)



## ஹிஷாலினி விவகாரத்தில் மகளிர் அமைச்சு தலையீடு

கொழும்பு,ஜூலை 24

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடைய இல்லத்தில் பணிக்கமர்த்தப்பட்டு, தீக்காயங்களால் உயிரிழந்த சிறுமியின் இறப்புத் தொடர்பில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சு பிரத்தியேகமாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொறுப்புக் கூற வேண்டிய மக்கள் பிரதிநிதியொருவர் இவ்வாறு சிறுமியொருவரை வீட்டு வேலைக்கு அமர்த்துவது பாரதூரமானதொரு குற்றமாகும். அந்த அடிப்படையில் இது குறித்த விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார். (ஒ.4)

## பங்காளிக்கட்சிகளுடன் இணையும் ஐ.ம.சக்தி

### தேர்தலுக்கான திட்டம்

கொழும்பு,ஜூலை 24

எதிர்த்தரப்பிலுள்ள பங்காளிக்கட்சிகளுடன் கூட்டணியமைத்து, எதிர்வரும் தேர்தல்களில் களமிறங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது என்று கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியானது கடந்த காலத்தில் அதன் பங்காளிக்கட்சிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டு, அவற்றுடன் இணைந்து தேர்தல்களுக்கு முகங்கொடுத்தது. எனினும் எதிர்வரும் காலங்களில் நடைபெறவிருக்கும் தேர்தல்களின் போது எதிர்த்தரப்பிலுள்ள பங்காளிக்கட்சிகளுடன் கூட்டணியமைத்து களமிறங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது- என்றார். (ஒ.4)

## கொரோனாத் தொற்று: சந்தை வீதி முடக்கம்

வவுனியா.ஜூலை 24

கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதி தற்காலிகமாக இராணுவத்தினரால் முடக்கப்பட்டுள்ளது.


குறித்த வீதியில் அமைந்துள்ள முகச்சவரம் செய்யும் நிலையத்தில் பணிபுரியும் 3 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது அண்மையில் உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து நேற்றுக் காலை குறித்த வீதியூடனான போக்குவரத்து இராணுவத்தால் துண்டிக்கப்பட்டு, முற்றாக முடக்கப்பட்டது.

இதேவேளை முடக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சுகாதார பரிசோதகர்களால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ஐ-110)



## கொத்தலாவல பல்கலைக்கழகம் இராணுவமயப்படுத்தப்பட்டதல்ல

### பாதுகாப்புச் செயலரின் விளக்கம்



கொழும்பு,ஜூலை 24

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் சிலர் கூறுவதைப் போன்று முழுமையாக இராணுவமயப்படுத்தப்பட்டதல்ல. இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழுவில் இராணுவ அதிகாரிகள் உள்ள போதிலும் அவர்களால் கற்பித்தலுடன் தொடர்புடைய விடயங்களில் எவ்வித தீர்மானமும் எடுக்க முடியாது.

இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிலர் கூறுவதைப் போன்று இந்தப் பல்கலைக்கழகத்தில் எவருக்கேனும் நினைத்தபடி உயர் பட்டத்தை வழங்க முடியாது. இலங்கையில் மாத்திரமல்ல. உலகில் எந்தவொரு பாதுகாப்புப் பல்கலைகழகத்திலும் உபவேந்தராக இராணுவ அதிகாரியே நியமிக்கப்படுவார். இவர் தவிர பிரதி உபவேந்தராக இராணுவ அதிகாரியும், பிறிதொரு பேராசிரியரும் நியமிக்கப்படுவார்.

இவ்வாறு வழமையாக பின்பற்றப்பட்டு வரும் முறைமையை தவறாக விமர்சிப்பதானது சேர்.ஜோன் கொத்தலாவலவுக்கு ஏற்படுத்தப்படும் அவமதிப்பாகும்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் உயர் பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்கு 210 பேர் விண்ணப்பித்திருந்த போதிலும், 10 பேர் மாத்திரமே பட்டத்தைப் பெற்றுள்ளனர். எதிர்த்தரப்பினர் கூறுவதைப் போன்று நினைப்பவருக்கெல்லாம் இந்தப் பட்டத்தை பெற்றுக் கொடுக்க முடியாது. பாதுகாப்புச் செயலாளராக இருந்தாலும், என்னாலும் அதனைக் குறுக்கு வழிகளில் பெற்றுக்கொள்ள முடியாது. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதோடு மாத்திரமின்றி , கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவை என்று குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகளும் நிச்சயம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

அதில் ஒரு புள்ளி குறைவடைந்தால் கூட அனுமதி வழங்கப்படமாட்டாது. கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழுவில் சிவில் பிரஜைகளும் உள்ளனர். இராணுவ அதிகாரிகளும் உள்ளனர். எனினும் இந்தக் குழுவால் கல்வி நடவடிக்கைகளில் தலையிட முடியாது. மாறாக பல்கலைக்கழகத்தை எவ்வாறு மேலும் மேம்படுத்துவது மற்றும் மாணவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய விடயங்களில் மாத்திரமே தீர்மானங்களை முன்னெடுக்க முடியும்- என்றார். (ஒ.4)

# கொத்தலாவல பல்கலை சட்டவரைவை மீளப்பெறுக

## தேசிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 24

உத்தேச ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைவை அரசு உடனடியாக மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய வலியுறுத்தியுள்ளார். கொழும்பிலுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பல்கலைக்கழகத்துக்கு எதிராக வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களைத் தொடர்ந்து, அதனைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

சிவில் பல்கலைக்கழகக் கட்டமைப்புக்களை நிர்வகிக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குக் கீழ் இராணுவப் பல்கலைக்கழகமொன்றை எவ்வாறு உள்நுழைக்க முடியும்?.

ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தை இராணுவப் பல்கலைகழகமாக முன்னெடுத்துச் செல்லப்போகின்றார்களா? அல்லது அனைத்து மாணவர்களுக்கும் உரிய சிவில் பல்கலைக்கழகமாக முன்னெடுத்துச்செல்லப் போகின்றார்களா? என்ற தீர்மானமிக்க கேள்விக்கு ஜனாதிபதி பதிலளிக்க வேண்டியது அவசியமாகும்- என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிஷாலினி விவகாரத்தால் இனமுரண்பாடு வேண்டாம்

## சு.க. வலியுறுத்து

**கொழும்பு,ஜுலை 24**
**முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த நிலையில் தீக் காயங்களால் உயிரிழந்த மலையகச் சிறுமி ஹிசாலினி விவகாரத்தால், தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்க வேண்டாம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தற்போது அதிகரித்துள்ளன. சிறுவர்களுக்கு பாதுகாப்பற்ற தன்மை காணப்படுகின்றது. எனவே சிறுவர் பாதுகாப்புத் தொடர்பிலான சட்டங்களை சமூகத்தின் மத்தியில் முழுமையாகச் செயற்படுத்தும் திட்டங்கள் வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் வன்முறைகளுக்கு எதிரான சட்டங்களைத் திருத்திய மைத்து, தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றால் போல் மாற்றியமைக்க வேண்டும். ஷிசாலினியின் இறப்புத் தொடர்பில் பொலிஸார் முறையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். உண்மையான காரணங்களைப் பகிரங்கப்படுத்தபட வேண்டியது அவசியமாகும். இல்லாவிடின் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் முரண்பாடு தோற்றம் பெறுவதற்கு வாய்ப்புள்ளது- என்றார். (ஒ.4)



# மக்களின் உணர்வுகளை நசுக்கும் ஆட்சியாளர்கள்

## காவிந்த எம்.பி. ஆதங்கம்

கொழும்பு.ஜுலை 24
மக்களின் உணர்வுகளை நசுக்கும் தற்போதைய ஆட்சியாளர்கள், வெறுமனே தமது அரசியல் நலன்களுக்காக அவர்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்னால் நிறுத்துவோம் என்று வாக்குறுதியளித்தே இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிப்பீடம் ஏறினர். தற்போது அதற்கான அனைத்து வாய்ப்புக்களும் காணப்படும் சூழ்நிலையி லும், உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தாமதிக்கின்றனர். மக்களின் உணர்வுகளை ஆளுந்தரப்பு வெறுமனே தமது அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது- என்றார். (ஒ.4)

# ஒரே நாளில் 467 கிலோ கஞ்சா மீட்பு

கொழும்பு,ஜுலை 24
நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, 467 கிலோக்கிராம் கஞ்சா மற்றும் ஒரு தொகை ஹெரோய்ன் போதைப் பொருள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.
அத்துடன் 3 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
மட்டக்குளியில் 13 கிராம் ஹெரோய்னுடன் சந்தேக நபரொருவரும், களனியில் 14 கிராம் ஹெரோய்னுடன் சந்தேகநபரொருவரும், பெம்முல்ல பிரதேசத்தில் 4 கிராம் ஹெரோய்னுடன் பெண்ணொருவரும் கைதுசெய்யப்பட்டனர்.
சந்தேகநபரான பெண்ணிடம் இருந்து 9 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.
அதேவேளை நீர்கொழும்பு கடற்கரைப் பகுதியிலிருந்து 467 கிலோகிராம் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.
கடல் மார்க்கமாக இந்த கஞ்சாப் பொதிகள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# கொத்தலாவல பல்கலைக்கழக சட்டவரைவை தோற்கடிப்போம்

## சம்பிக்க உறுதி

கொழும்பு,ஜுலை 24
ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புச் சட்டவரைவை தோற்கடிப்பதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம். பாதுகாப்புத்துறையை வலுப்படுத்தல் என்ற போர்வையில் தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாகுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்தச் சட்டவரைவுக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட பல்கலைக் கழக மாணவர் அமைப்புக்களால் முன்னெடுக்கப்படும் அனைத்துப் போராட்டங்களுக்கும் எமது ஆதரவை வழங்குவோம்.
நாட்டில் தற்போது இயங்கிவரும் பல்கலைக்கழகங்கள் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக, விசேட சந்தர்ப்பங்களின்போது நிறுவப்படும் கட்டமைப்பையும் பல்கலைக் கழகம் என்ற வரையறையின்கீழ் கொண்டு வந்துள்ளனர்.
இந்தச் சட்டவரைவின் ஊடாக முன்மொழியப்பட்ட நடைமுறைகள் எவையும் அரசால் மீளப்பெற்றுக் கொள்ளப்படவில்லை. மாறாக ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் பல்கலைக்கழக சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, விசேட சந்தர்ப்பங்களை முன்நிறுத்தி பல்கலைக் கழகங்களை உருவாக்கக்கூடிய வாய்ப்பு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
ஜோன் கொத்தலாவல பல்கலைக் கழகமானது, பாதுகாப்புத்துறையுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், பணத்தைப் பெற்றுக்கொண்டு சாதாரண மாணவர்களையும் உள்வாங்கக்கூடிய நிலை காணப்படுகின்றது. அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு புறம்பாக, முப்படைத் தளபதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் பங்களிப்புடனான நிர்வாக சபையால் இந்தப் பல்கலைக்கழகத்தை நிர்வகிப்பதற்கான வாய்ப்பேற்படுத்தப்படுகின்றமை அவதானத்துக்குரிய விடயமாகும்- என்றார். (ஒ.4)

# பிரேரணை தோற்றாலும் நோக்கம் நிறைவேறியது

## ஐ.ம.சக்தி பெருமிதம்

கொழும்பு.ஜுலை 24
வலுசக்தி அமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தாலும், நாம் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கையின் அடிப்படையில் கிடைக்கப் பெறும் முடிவை மாற்றியமைக்க முடியாது. இதனை நாம் நன்கறிவோம்.
எனினும் பொதுமக்களுக்கு சில உண்மைகளை வெளிப்படுத்தும் நோக்கிலேயே நாம் நம்பிக்கையில்லாப்பிரேரணையைக்கொண்டுவந்தோம். அந்த நோக்கம் வெற்றியடைந்துள்ளது. எதிர்வரும் காலத்தில் அதன் பெறுபேற்றை பொதுமக்கள் வெளிப்படுத்துவர். நாடளாவிய ரீதியிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயனளிக்கக்கூடிய விதத்தில், இதுவரையான காலமும் சுயாதீனமாகப் பேணப்பட்டு வந்த மகாபொல நிதியம் தொடர்பான சட்டத்தைத் திருத்தங்களுக்கு உட்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றார். (ஒ.4)

# மக்களுக்குத் தேவையான எரிபொருள்கள் இருப்பில்

## அமைச்சர் தகவல்

கொழும்பு. ஜுலை 24
மக்களுக்குத் தேவையான எரிபொருள்கள் தாராளமாக இருப்பில் உள்ளன என்று வலுச்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் அதனை முழுமையாக கையாளும் அதிகாரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கே உள்ளது. தற்போது கொரோனா நெருக்கடி நிலைமையில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் விலை குறைவடைந்திருந்தது. உலக நாடுகள் முடக்கத்தில் இருந்தமை காரணமாக எரிபொருள் விலை குறைவாக இருந்தது. பின்னர் நாடுகள் வழமையாக இயங்க ஆரம்பித்த பின்னரும், ஒபெக் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக மீண்டும் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் தற்போது மக்களின் பயன்பாட்டுக்கும் தேவையான எரிபொருள்கள் தாராளமாக உள்ளன. நாட்டில் எரிபொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படாது. இலங்கையில் எரிபொருள் களஞ்சிய நிலையங்களில் முழுமையாக எரிபொருள் நிரப்பினாலும், எம்மால் ஒரு மாதத்துக்குரிய எரிபொருள்களையே சேமிக்க முடியும்.
எனவே இந்தியாவின் வசம் இருக்கும் எமது எண்ணெய்க் குதங்களில் 24 குதங்களை மீண்டும் பெற்றுக்கொள்ள இந்தியாவுடன் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம்.
- என்றார். (ஒ.4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காமிக்ஸ் 'மாஸ்க்'

வீட்டை விட்டு வெளியே செல்லும்போது பர்ஸைக்கூட மறந்துசெல்லலாம். ஆனால், தப்பித்தவறி முகக்கவசத்தை மட்டும் மறக்கக் கூடாது என்பது தற்போது எழுதப்படாத விதி. அத்தியாவசியமாகிவிட்ட அந்த முகக்கவசங்களை விதவிதமான தோற்றத்தில் அணிய வேண்டும் என விரும்பும் புதுமை விரும்பிகள் உலகெங்கும் இருக்கிறார்கள்.

அந்த வகையில் குரோஷியாவைச் சேர்ந்த ஃபேஷன் டிசைனர் ஷோரேன் அர்கோவிக் என்பவர், காமிக்ஸ் வாசகங்கள், காமிக்ஸ் படங்களுடன் கூடிய முக்கவசங்களைத் தயாரித்து விற்பனைக்கு விட்டிருக்கிறார். எதிர்பார்த்ததைவிட இந்த முகக்கவசங்களுக்கு வரவேற்பு கிடைக்க, இப்போது காமிக்ஸ் 'மாஸ்க்' குரோஷியாவில் ஹிட்டாகிவிட்டன.



# உறவுகள் ஏன் நிலைப்பதில்லை?

உறவு இப்படித்தான் இருக்க வேண்டும் எனும் முடிவை எடுத்துவிட்டு தான் நாம் பழகவே ஆரம்பிக்கிறோம். நாம் விடும் முதல் தவறு இது.

எந்த உறவையும் நாம் அதன் போக்கோடு ஏற்றுக்கொள்வதில்லை. ஆரம்பத்தில் எதெல்லாம் ஈர்த்து, அதன் பால் எம்மை கவர்கிறதோ, அதெல்லாம் அந்த உறவு நமக்கான பின்னே பிடிக்காதது ஆகிப்போகிறது.

பேசி தீர்க்காமல் எதுவும் சரியாகப் போவதில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவுக்கு அவ்வளவு அப்படி பேசியும் தீராமல் போனால், விலகிவிடுதல் நலம் என்பதுவும்.


தற்காலிக வலிகளை நினைத்தே வாழ்க்கையை வாழாமல் வாழ்ந்து முடிக்கிறோம் என்பதுதான் உண்மை. ஆனால், அந்த வலிகள் காயங்களாகி சீழ் பிடித்து முற்றி வெளிவரும்போதான விளைவுகள் எவ்வளவு பாரதூரமானவை என்பதை நினைத்தே பார்ப்பதில்லை நாம்.

உறவுகளை எப்போது அதன் இயல்போடு ஏற்று இயல்பாய் வாழ முடிகிறதோ, அப்போது உறவுகள் மீண்டும் மலரும். எனக்கு பிடித்தது தான் உனக்கும் பிடிக்க வேண்டும் என்பதல்ல அன்பு.

எனக்கு வலிப்பதை, எனக்கு உணர்வதை போல்தானே நீயும் என்று எண்ணி, அவற்றை தவிர்த்து ஒருவரை ஒருவர் சக மனிதனாய் நினைக்க தொடங்கும்போது உறவுகள் நிலை பெறுகின்றன.

உங்களுக்கு யாரேனும் நம்பிக்கை துரோகமோ ஏதும் தீங்கோ இளைக்கும்போது உங்களின் மனோநிலை என்னவாயிருக்குமோ, அதை பிறருக்கு நீங்கள் கொடுக்கும் போதும் அதேதான் நடக்கும்.

எனவே, எம்மிலிருந்து மாற்றம் கொண்டு வர முயற்சிப்போம்... ஏனெனில், வாழ்க்கை ஒரே ஒரு முறைதான். அதுவும் சில காலம்தான்.



# பவர் ஸ்டாருடன் வனிதாவுக்கு திருமணமா?

நடிகை வனிதா விஜயகுமாருக்கு 4வது திருமணம் செய்துக் கொள்ளும் யோகம் இருக்கிறது என செய்திகள் வெளியாகி இருக்கும் நிலையில், தற்போது திருமண புகைப்படம் வெளியாகியுள்ளது. சில தினங்களுக்கு முன்பு வனிதா 4வது திருமணம் செய்ய இருக்கிறார் என செய்திகள் வெளியானது. இதற்கு வனிதா மறுப்பு தெரிவித்தார். பின்னர் வனிதாவின் எதிர்காலத்தை கணித்த ஜோதிடர் ஒருவர், அவருக்கு மீண்டும் திருமணம் நடக்கும் என்று கூறியிருந்தார். இந்நிலையில் நடிகை வனிதா, தனது சமூக வலைத்தள பக்கத்தில் பவர்ஸ்டார் சீனிவாசனுடன் மாலையும் கழுத்துமாக இருக்கும் புகைப்படத்தை பதிவு செய்திருக்கிறார். இதனை பார்த்த நெட்டிசன்கள் உண்மையிலேயே உங்கள் இருவருக்கும் திருமணம் முடிந்ததா? அல்லது பட ஷூட்டிங்கில் எடுத்த புகைப்படமா? என கேட்டு வருகின்றனர்.




கோழியின் கிறுக்கல்!! @Kozhiyaar

தலைக்கு முடியும், அதற்கு சாயமும் தேவையில்லை என்பதை உணர ஐம்பது ஆண்டுகள் தேவைப்படும் போல!!



# இன்றைய நாள்

**மேடம்:** பணிச்சுமை குறையும் நாள். நல்லவர் உதவியால் நலம் காண்பீர்கள். புகழ் கூடும். லாபத்துக்காகப் பழகியவர்களை இனம் கண்டு விலகுவீர்கள்.

**இடபம்:** மற்றவர்களுக்கு உதவி செய்வீர்கள். உடல்நிலை சீராகும். யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். தற்புகழ்ச்சியும் வேண்டாம். வீண் செலவைக் குறையுங்கள்.

**மிதுனம்:** ணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினை மறையும். நல்ல செய்தி வரும். கனிவாகப் பேசி எதையும் சாதிப்பீர்கள். சகோதரர்களின் உதவி கிடைக்கும்.

**கடகம்:** கோபப்படுவதன் மூலம் யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். எந்தச் செயலிலும் கவனம் தேவை. புதியவர்களை நம்ப வேண்டாம். மனக் குழப்பம் மறையும் நாள். பிள்ளைகளால் பெருமிதம் உண்டாகும்.

**சிம்மம்:** எதிர்காலம் பற்றிய பயம் மறையும். திடீர் செலவுகள் ஏற்படலாம், நண்பர்களால் ஏற்பட்ட குழப்பம் தீரும். சமூக அந்தஸ்து உயரும். புதிய முயற்சியில் ஏற்பட்ட தடை விலகும்.

**கன்னி:** அலைபேசி வழி நல்ல தகவல் வரும். ஆதாயம் கிடைக்கும் நாள். பணப் புழக்கம் அதிகரிக்கும். நண்பர்களைச் சந்தித்து பேசி மகிழ்வீர்கள்.

**துலாம்:** பணி மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும். சுபசெய்தி வரும். சாதனை ஒன்றை நிகழ்த்தி பெருமை கொள்வீர்கள். நண்பர்கள் ஒத்துழைப்பர்.

**விருச்சிகம்:** பிரிந்தவர் கூடும் நாள். யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். உறவினர் உங்களைப் பாராட்டுவர். மன அடக்கத்துடன் செயல்படுவீர்கள்.

**தனுசு:** சேமிக்க வாய்ப்புண்டு. உடன் பிறந்தவர்களிடம் கோபம் வேண்டாம். முயற்சியில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். பணியில் சலிப்பு தோன்றும்.

**மகரம்:** கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். சுபசெய்தி வரும். விருப்ப ஓய்வை தவிர்ப்பது நன்மையளிக்கும். பிடிவாதம் வேண்டாம். பெரிய தீர்மானங்கள் எடுக்க இது நேரமல்ல.

**கும்பம்:** யோகமான நாள். பேச்சுவார்த்தை ஒன்று முடிவுக்கு வரும். வாகனப் பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். புது முதலீட்டை தவிர்க்கவும்.

**மீனம்:** பிறரது விமர்சனங்களைக் கண்டு கவலைப்படாதீர்கள். நீங்கள் நம்பிய ஒருவர் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார். இனிய செய்தி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டாவை விட ஆபத்தான கொரோனா திரிபு விரைவில்

வொஷிங்டன், ஜுலை 24

**டெல்டா வைரஸை விடவும் ஆபத்தான கொரோனா வைரஸ் விரைவில் வரும். அதன் தாக்கம் உலக நாடுகளால் கட்டுப்படுத்த முடியாத வகையில் இருக்கும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை செய்துள்ளது.**




இது தொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் கேப்ரியேசஸ் தெரிவிக்கையில்,

உலகின் பல்வேறு பகுதிகளில் தற்போது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் கொரோனாவின் டெல்டா மாறுபாட்டை விட அதிக பரவல் கொண்டதும், ஆபத்து நிறைந்ததுமான மற்றுமொரு மாறுபாட்டை மனிதகுலம் விரைவில் பார்க்கக்கூடும். கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசிகள் கண்டுபிடிப்பு மற்றும் உலகம் முழுவதும் அதன் பயன்பாடுகள் மட்டுமின்றி, பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் இருந்தபோதிலும் உலகம் மற்றொரு கொரோனா அலையின் விளிம்பில் உள்ளது.

இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அதில் முக்கியமானது, அனைவருக்கும் சமமான அளவுக்கு தடுப்பூசி கிடைக்காதமை. குறிப்பாக, குறைந்த வருவாய் கொண்ட நாடுகளில் வெறும் ஒரு சதவீத மக்களே குறைந்தபட்சம் ஒரு டோஸ் தடுப்பூசி பெற்றிருக்கிறார்கள். ஆனால் வளர்ந்த நாடுகளில் மொத்த மக்கள்தொகையில் பாதிக்கு மேற்பட்டோர் தடுப்பூசி போட்டுள்ளனர். சோதனைகள் மற்றும் சிகிச்சைகள் உட்பட தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான தடுப்பூசிகள் மற்றும் பிற வழிகளைப் பகிர்ந்து கொள்வதில் தற்போதைய உலகளாவிய அநீதி "சமூக மற்றும் பொருளாதார கொந்தளிப்புக்கு'' மட்டுமின்றி, வைரஸ் மேலும் பரவுவதற்கும் வழிவகுக்கிறது.

இதில் ஒரு திருப்புமுனையை காண வேண்டுமென்றால், உலக சுகாதார அமைப்பு, சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கி போன்றவை இதற்கு முன்னர் கோடிட்டுக்காட்டிய பல்வேறு இலக்குகளை அடைய வேண்டியது முக்கியம். முக்கியமாக ஒவ்வொரு நாட்டிலும் வருகிற செப்டெம்பர் மாதத்துக்குள் குறைந்தபட்சம் 10 சதவீத மக்கள் தொகைக்காவது தடுப்பூசி சென்றடைந்திருக்க வேண்டும். ஆண்டிறுதிக்குள் 40 சதவீதமாகவும், அடுத்த ஆண்டு மத்திய பகுதிக்குள் 70 சதவீதமாகவும் உயர்ந்திருக்க வேண்டும் என்றார். (ம)



## தெ.ஆபிரிக்காவில் கலவரம் உயிரிழப்பு 300 தாண்டியது

ஜோகன்ஸ்பெர்க், ஜுலை 25

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிகர் ஜேக்கப் ஜுமா கைது செய்யப்பட்டதை அடுத்து அந்த நாட்டில் பல இடங்களில் கலவரங்கள் வெடித்துள்ளன. இதில் 350க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜுமா ஊழல் வழக்கில் கடந்த 7ஆம் திகதி கைது செய்யப்பட்டார். இதைக் கண்டித்து அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு போட்டியாக ஆளும் கட்சியினரும் வன்முறையில் இறங்கியுள்ளனர். ஜேக்கப் ஜுமா அதிபராக பதவி வகித்தபோது, இந்தியர்களுக்கு நாட்டை தாரை வார்த்து விட்டனர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்தக் கலவரங்களில் இதுவரை 350க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். கலவரங்கள் தீவிரம் பெறுவதால் இறப்புக்களும் மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

## மெக்கா பாதுகாப்பில் பெண்களுக்கு இடம்

ரியாத், ஜுலை 24

சவூதி அரேபியாவில் உள்ள இஸ்லாமியர்களின் புனிதத் தலமான மெக்கா மற்றும் மெதிணாவில் இராணுவத்தில் உள்ள பெண்கள் பாதுகாவலர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். சவூதி அரேபியாவின் இளவரசர் முஹம்மது பின் சல்மான் தனது நாட்டில் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளார். பழமைவாதத்திலிருந்து விடுபடுவதன் மூலம் சர்வதேச முதலீட்டை ஈர்க்கலாம் என அவர் நம்புகிறார். அதனால், 'விஷன் 2030' என்ற பெயரில் அவர் அவ்வப்போது சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

பெண்களுக்கு கார் செலுத்த அனுமதி, 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தங்களின் பாதுகாவலர்கள் அனுமதியில்லாமல் பயணம் செய்ய அனுமதி, சொத்துரிமையில் கூடுதல் கட்டுப்பாடு, ராணுவத்தில் பெண் படை போன்றவற்றை அறிவித்தார். அந்த வரிசையில் மெக்கா, மெதினா புனிதத் தலங்களின் பாதுகாப்புப் பணியில் பெண் வீராங்கனைகளைப் பணியமர்த்தும் திட்டத்தையும் செயல்படுத்தியுள்ளார். (ம)




## கலவரங்கள் எதிரொலி: விடுதலையானார் ஜுமா

ஜோகன்ஸ்பெர்க், ஜுலை 25

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் ஜுமாவை விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, அவரின் ஆதரவாளர்கள் நடத்திய போராட்டம் கலவரமாகத் தீவிரம் பெற்றதையடுத்து, ஜுமா விடுதலை செய்யப்பட்டார்.

தென்னாபிரிக்காவின் அதிபராக கடந்த 2009ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை அதிபராக இருந்தார் ஜுமா. இந்தக் காலப்பகுதியில் அவர் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், தனக்கு எதிரான வழக்கு விசாரணைகளில் அவர் முன்னிலையாகாததை அடுத்து அவருக்கு 15 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. கடந்த 7ஆம் திகதி அவர் சிறையில் அடைக்கப்பட்டார். ஜுமாவை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி அவரின் ஆதரவாளர்கள் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பல இடங்களில் போராட்டங்கள் கலவரங்களாக மாறியுள்ளன. இந்த நிலையில், ஜுமா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம)





சீனாவின் மத்திய பகுதியில் உள்ள ஹெனான் மாகாணத்தில் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் இல்லாத வகையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் கடும் மழை கொட்டித் தீர்த்துள்ளது. இதில் சுமார் 40 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஹெனான் மாகாணமே வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி பெறாதோரே கொரோனாவால் இறப்பு



கொழும்பு,ஜூலை 24

**எந்த ஒரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்களே, இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தம்மையும், பிறரையும் பாதுகாக்க அனைவரும் தடுப்பூசி பெற்றுக் கொள்வது அவசியம். போதியளவு கொரோனாத் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கிடைத்துள்ளன. மேலும் தடுப்பூசிகள் விரைவில் கிடைக்கவுள்ளன.

அதற்கமைவாக அனைவருக்கும் தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வருகைதரும் மக்களின் எண்ணிக்கை சில நாள்களாகக் குறைவடைந்துள்ளது. மக்களின் வருகை மந்தமாகக் காணப்படுகின்றது என்றும் சுகாதாரத்துறையினர் அறிவித்துள்ளனர். இதுவரை கொரோனாவால் உயிரிழந்துள்ளவர்கள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவில் அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்பவர்கள் எந்த ஒரு தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளவில்லை. எனவே 60 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் நோய்களோடு வாழ்பவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது மிகவும் அவசியம்- என்றார். (ஒ,4)

## அமெரிக்க அதிகாரிகளுடன் ஹக்கீம் விசேட சந்திப்பு

கொழும்பு,ஜூலை 24

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் முக்கிய அதிகாரிகள் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு இடையிலான முக்கிய சந்திப்பொன்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பதில் தலைமை அதிகாரி, அதன் பொருளாதாரப் பிரிவின் உயர் அதிகாரி சுசான் எப். வல்கே மற்றும் தூதரகத்தின் பிரதி அரசியல் பிரதானியான மார்க்கஸ் பீ. காபெண்டர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, அதிகாரப் பகிர்வு, சட்டத்தின் ஆட்சி, பயங்கரவாதத் தடைச் சட்டம், சிறுபான்மையினர் தொடர்பிலான நிலைப்பாடுகள் போன்றவற்றை மையப்படுத்தி கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,4)



ஹிஷாலினி விவகாரம்

## ரிஷாத்தின் மனைவி உள்ளிட்ட மூவர் கைது

கொழும்பு,ஜூலை 24

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த ஹிஷாலினியின் இறப்பு விவகாரத்தில், ரிஷாத்தின் மனைவி, மனைவியின் தந்தை மற்றும் சிறுமியை வேலைக்கமர்த்திய தரகர் ஆகியோர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

டயகம பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுமி உயிரிழந்த சம்பவத்தையடுத்து, குறித்த மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியின் இறப்புத் தொடர்பில் பொலிஸாரால் பல்வேறு கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மனைவியிடம் வீட்டுக்குச் சென்ற பொரளை பொலிஸைச் சேர்ந்த விசேட குழு ஒன்று நேற்று முன்தினம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,4)

## அவசர சிகிச்சை பிரிவுக்குள் பாம்பு

கொழும்பு,ஜூலை 24

கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் நாக பாம்பு ஒன்று நுழைந்துள்ளது.

மருத்துவமனையின் பாதுகாப்பு ஊழியர்கள் பெரும் முயற்சிகளுக்கு பின்னர் பாம்பைப் பிடித்து ஒரு போத்தலில் அடைத்தனர்.

அதன்பின்னர் சம்பந்தப்பட்டோருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

எனினும் எவரும் முன்வராத காரணத்தால், இறுதியில் பாம்பு காட்டுப்பகுதிக்குள் விடப்பட்டது. (ஒ,4)



## கடல் அழிவுக்கு அரசே காரணம்

*மீனவர் சங்கங்கள் குற்றச்சாட்டு*

கொழும்பு,ஜூலை 24

இலங்கையின் மீன்வளம் அழிவடைதற்கு அரசே முழுக்காரணம். நாடு முழுவதும் உள்ள கடலுக்கு அரசால் திருப்பி விடப்பட்ட கழிவுநீர் அமைப்பே பிரதான காரணம் என்று மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

களனி ஆறு, தடுகம் ஓயா, மற்றும் முத்துராஜவல பிரதேசத்தில் கடலில் திருப்பி விடப்படும் கழிவு நீர் உள்ளிட்ட நாட்டில் உள்ள அனைத்து கழிவுநீர் அமைப்புகளும், கடலில் கலப்பதால் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு தவறியுள்ளது.

சிங்கப்பூர் நிறுவனத்துக்குச் சொந்தமான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடந்த ஜூன் மாதம் கொழும்பு கடற்கரையில் நங்கூரமிட்ட நிலையில் தீக்கிரையானது.

இதனால் தீங்கு விளைவிக்கும் அமிலங்கள், இரசாயனங்கள் மற்றும் தீக்கிரையான பொருள்களின் பகுதிகள் கடலில் கலந்துள்ளமையால், விபரிக்க முடியாத சுற்றுச்சூழல் சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறெனில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான மீன்கள் நீர் கொழும்பு மற்றும் சிலாபம் கடற்கரைகளில் கரையொதுங்கியிருக்க வேண்டும்.

ஆமைகள் பெரும்பாலும் மீன்பிடி வலைகளில் சிக்கி உயிரிழக்கின்றன. கடல் கொந்தளிப்புக் காலத்திலும் ஆமைகள் கரையொதுங்கும். அவ்வாறு இல்லாமல், இராசாயனங்களால் ஆமைகள் உயிரிழக்கின்றன என்று தெரிவிக்கப்படும் கருத்தை ஒருபோதும் ஏற்க முடியாது. பேர்ள் கப்பலை விட அரசு கடலில் அதிக இரசாயனங்கள் கலக்கச் செய்துள்ளது.

கொழும்பு துறைமுக நகர கட்டுமானம் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மீனவர்களை விட, சிறியளவிலான மீனவர்களே அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்கள் குறித்து அரசுக்கு எந்தவொரு திட்டமும் இல்லை.

ஒவ்வொரு திட்டத்திலும் சிறிய அளவிலான மீனவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். கப்பல் தீப்பிடித்த காரணத்தால் மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்போதும் சிறிய அளவிலான மீனவர்களுக்கு அநியாயம் இடம்பெற்றுள்ளது.

அரசு மற்றும் பேராயரின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுக்களால் இழப்பீடு வழங்கப்படுவதால், சிறு மீனவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ஒ,4)

## பாலியல் குற்றச்சாட்டில் ரிஷாத்தின் மச்சான் கைது

கொழும்பு,ஜூலை 24

பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மைத்துனர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், ரிஷாத் பதியுதீனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பணிப்பெண்ணாக பணியாற்றிய 22 வயதான பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த டயகம பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுமி உயிரிழந்த சம்பவத்தையடுத்து ரிஷாத்தின் மனைவி, மனைவியின் தந்தை மற்றும் தரகர் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் கொலைகளுக்கும் சர்வதேச விசாரணை தேவை

## கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து



மட்டக்களப்பு, ஜூலை 24
தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகள் இனப்படுகொலைகளுக்கு சர்வதேசம் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வலியுறுத்தினார்.

மேலும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும் என்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜூலை படுகொலை நாளான நேற்று மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

அதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், தமிழ்த் தேசமும் இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும், தமிழர்களது காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படல் வேண்டும், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமிறக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும், அதற்கான கணக்காளர் உடனடியாக நியமிக்கப்படல் வேண்டும், அந்த அலுவலகம் காணி விவகாரங்களை கையாள்வதனை தடுக்கும் மறைமுக சதிச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்னும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியிருந்தார்கள்.

(து)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி போராடுவோர் மீது சட்ட நடவடிக்கை

## மேல்மாகாண மூத்த டி.ஐ.ஜி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 24
கொவிட் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த சுகாதார பணிப்பாளரால் வெளியிடப்பட்ட கட்டுப்பாட்டு விதிகளை மீறி ஆசிரியர் சங்கங்கள் நடத்திய போராட்டங்களுக்கு எதிராக நீதிமன்றத்துக்குச் செல்லவுள்ளோம் என்று மேல்மாகாணத்தின் மூத்த டி.ஐ.ஜி. தேசபந்து தென்னக்கோன் கூறியிருக்கிறார்.


சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து 700 ஆசிரியர்கள் கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்றுமுன்தினம் திரண்டனர். இந்த எதிர்ப்புப் போராட்டம் காலி ஃபேஸ் கிரீன் மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகே நடைபெற்றது. சட்டவிரோத கூட்டம் முற்றிலும் தடை செய்யப்பட்ட நேரத்தில் இது நடைபெற்றுள்ளது. அவசர தேவைக்காகக்கூட 15 முதல் 30 பேர் மட்டுமே அணிதிரள முடியும் என்று சட்டம் உள்ளபோது அவர்கள் அதற்கு எதிராக செயற்பட்டுள்ளனர். இதன் விளைவாக அவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். என்று அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (து-சி)

# சேவைக் காலத்தைவைத்து பதவி உயர்வு வழங்குங்கள்

கிளிநொச்சி, ஜூலை 24
கல்விசாரா ஊழியர்களின் சேவைக்காலத்தை அடிப்படையாகக்கொண்டு பதவி உயர்வு வழங்குங்கள் என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் இணைத்தலைவர் ஆறுமுகம் புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார். கிளிநொச்சி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரச திணைக்களங்களில் ஆளணி வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாதுள்ளன. வடக்கு மகாணத்தில் கல்விசாரா ஊழியர்களுக்கு 2013ஆம் ஆண்டு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. கல்வி திணைக்களத்தால் 8 வருடங்களாக அவர்களுக்கு பதவி உறுதிப்படுத்தப்படவில்லை. 8ஆம் ஆண்டு கல்வி தகைமையுடன் ஆள்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் சாதாரண தர சான்றிதழ்கள் கோரியுள்ளமையால் சிலருக்கு பணிநிலை உறுதிப்படுத்தல் கிடைக்கவில்லை. அதனையும் நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். உள்ளூராட்சி மன்றங்களிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பதவி நிலைகள் உயர்த்தப்படாமலும் காணப்படுகின்றன. இந்தநிலையில் வீதி தொழிலாளர்கள், சுகாதாரத் தொழிலாளர்களை மேற்பார்வை செய்வதற்கான பணிநிலை வெற்றிடத்துக்கு வெளியிலிருந்து ஆள்சேர்ப்புக்கு கோரியுள்ளனர். எனவே, நீண்டகாலமாக பணிபுரியும் அவர்களுக்கே குறித்த பணிநிலை வழங்கப்பட வேண்டும். அதற்கு கல்வி தராதரம் பார்க்காது அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். பணியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அரச திணைக்களங்களுக்கான இடமாற்றங்களை மேற்கொள்வதற்கான கட்டமைப்பு உள்ளது. என்றார். (து-6)





# மூழ்கிய கப்பலிலிருந்தும் எண்ணெய்க் கசிவு!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 24
“இலங்கையின் கடற்பிராந்தியத்தில் தீப்பரவலுக்குள்ளாகி, தற்போது கடலுக்குள் மூழ்கியிருக்கும் எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து எண்ணெய்க்கசிவு ஏற்பட ஆரம்பித்திருப்பதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அதிலிருந்து எண்ணெய்க்கசிவு ஏற்படுவது உண்மையானால், எவ்விதத்திலும் மதிப்பீடு செய்யமுடியாதவாறான சுற்றுச்சூழல் மாசடைவுக்கு எமது நாடு முகங்கொடுக்கவேண்டியேற்படும்" என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாயிகள் எதிர்கொண்டிருக்கும் உரப்பிரச்சினை, எரிபொருள் விலையேற்றம், ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புச் சட்டவரைவு உள்ளிட்டவற்றுக்கு எதிராக 'அடக்குமுறைக்கு அடிபணிய மாட்டோம். நாட்டை அழிக்கும் ஒடுக்குமுறை அரசை விரட்டுவோம்' எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஹோமாகமவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'புத்திஜீவிகளைக் கொண்ட அரசு' என்று கூறி தற்போதைய அரசை ஆட்சிபீடமேற்றிய 'வியத்மக'வை' சேர்ந்த பிரதிநிதிகளிடம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றோம். எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் எண்ணெய்க்கசிவு ஏற்பட ஆரம்பித்திருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் உண்மையானவையா? ஆமெனின், அதனாலேற்படக்கூடிய சூழல் பாதிப்புக்கள் மற்றும் வாழ்வாதாரப்பிரச்சினைகளுக்குப் பொறுப்புக்கூறப்போவது யார்? இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் பதில்கூறவேண்டியது அவசியமாகும். என்றார். (து-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 07 . 1933



மறைவு 23 . 07 . 2021

## ஆண்டி பசுபதி ( கொழும்பு பசுபதி )

**- முன்னாள் கொழும்பு துறைமுக கூட்டுத்தாபன உத்தியோகத்தர் -**

நெடுந்தீவு மேற்கு 2ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆண்டி பசுபதி (கொழும்பு பசுபதி) நேற்று (23.07.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆண்டி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகனும் நாகமுத்துவின் அன்புக் கணவரும் துரைராஜசிங்கம் (அசோக் - மாங்கல்யா ஜீவலறி நகைமாடம், அன்னம் மியூசிக் சென்ரர்), சந்திரவதனி, பரமேஸ்வரி, கௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரி, நாகராசா (Tip Top shop), கணேசலிங்கம் (சிகாஸ் Hotel), ஆனந்தஜோதி (A.M Stores) ஆகியோரின் அன்பு மாமனாரும், பூரணம், கந்தையா ஆகியோரின் சகோதரனும் கதிராசி, முருகேசு ஆகியோரின் மாமனும் மகாதேவன் (UK), நிஷாநந்தி (ஆசிரியர் - யாழ் மத்திய கல்லூரி), மதுஷன் (சிங்கப்பூர்), லவுஷிகா (Jaffna University), அனுத்திகா (Kalani University), யருசிகா (RDB Bank), செந்தூரன் (Business), பவித்திரன் (Mercedes Benz College), திபீகா (Uva University), கார்த்திகா (Jaffna Technology College), துஷாநந்தி, துவாரகா, மதுநிதன், ஜீவிகா, ரசிதா, ரஜீதா, ஜனனி (UK) ஆகியோரின் பேரனும் ஆதிரா (UK)வின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.07.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிதம், வரலாறு 06 - O/L, A/L**

தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தேசிய, மாவட்ட ரீதியில் சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் ஆசிரியர்

T.P: 077 482 5438

**பணிப்பெண் தேவை**

சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை

தொடர்பு : 077 262 6944

**வேலைவாய்ப்பு**

கனடாவில் தலைமையகத்தை கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு பெண் வரவேற்பாளர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்பு: 076 209 8164

**வேலையாள்கள் தேவை**

யாழ்நகரில் மானிப்பாயை அண்மித்த பகுதியில் இயங்கும் நிறுவனமொன்றிற்கு **தையல்** வேலையில் அனுபவமுள்ள, **பொதிசெய்ய பெண்** வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 490 1725


# மருத்துவமனையில் துப்புரவு

மன்னார், ஜூலை 24

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையில் மன்னார் நகர சபையின் ஏற்பாட்டில் நேற்று துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டது. மன்னார் நகர சபையின் தலைவர் ஞா. அன்ரனி டேவிட்சன் தலைமையில் நடைபெற்ற குறித்த துப்புரவுப்பணியில், நகர சபையின் செயலாளர், உப தலைவர், உறுப்பினர்கள் மற்றும் நகர சபையின் பணியாளர்கள், நகர சபையின் சுத்தி கரிப்பு பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். நீண்ட காலமாக பராமரிக்கப்படாத நிலையில் காணப்படும் இடங்கள் சபையால் அடையாளம் காணப்பட்டு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-56)


## 21ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 26 . 08 . 1937



மறைவு 24 . 07 . 2000

**அமரர்அம்பலவாணர் குலசேகரம்** (J.P)

(இளைப்பாறிய நூலகர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

**என்றும் உங்கள் நினைவுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்**

கைதடி, நுணாவில். சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும் **திருமதி சு. ஜெயலக்சுமி** அவர்களின் அன்புத்தந்தை **க.ப. சின்னராசா** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனை வேண்டுகின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

## 79 ஆவது பிறந்தநாள் நினைவும் ஏழாம் ஆண்டு நினைவஞ்சியும்

மலர்வு 01 . 07 . 1942



உதிர்வு 11 . 08 . 2014

**அமரர் தவமணி தம்பிராசா**

**திதி: ஆடித்திங்கள் அபரபக்ஷ பிரதமை**

ஆண்டுகள் பல ஆனாலும் அன்னையே உங்கள்
அன்பின் அரவணைப்பு என்றும் எம் மனதை விட்டகலாது
எமது ஈரவிழி நீரால் உங்கள் பாதமலர் இறைஞ்சுகின்றோம்
உங்கள் நிழல் என்றும் எம்மனதிலே நிலைத்திருக்கும்

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

மஞ்சத்தடி, இனுவில்.

கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 06 . 1936



இறப்பு 21 . 07 . 2021

# திரு. ஆறுமுகம் தம்பிநாதன்

யாழ். தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் நந்தாவில், ஜேர்மனியை வசிப்பிடமாகவும், கனடா Ottawa தற்போதய வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தம்பிநாதன் அவர்கள் கடந்த 21 - 07 - 2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், புஷ்பதேவி அவர்களின் அன்புக் கணவரும், யோகலா, யோகுணன் (குணா), யோகரன் (கரன்), யோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், முகுந்தன், விஜயபாலினி (ஜெயனி), கிருஷாந்தி (வேணி), சதீஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், தரங்கினி, கனிஷன், ஷ்ரவன், ஹரிஷன், அபிலாஸ், நிகிஷா, லக்ஷா, அபிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சிவபாக்கியம் மற்றும் சண்முகராசா, மகேஸ்வரி, ரதி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, அன்னலிங்கம், சங்கரசிவம் மற்றும் மனோரஞ்சிததேவி, கதிர்காமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.07.2021) ஞாயிற்றுக்கிழமை Capital Funeral Home & Cemetery, Ottawa, Canada வில் மதியம் 12 மணி தொடக்கம் 4. 00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கிரியையின் பின்னர் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகரன் - மகன்
(கனடா)

## மரண அறிவித்தல்

தாயின் மடியில் 30 . 07 . 1930



இறைவன் அடியில் 23 . 07 . 2021

# திருமதி சதாசிவம் சரஸ்வதி

மலேசியாவை பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி சதாசிவம் சரஸ்வதி** நேற்று (23.07.2021) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா - இரசம்மாவின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருந்தவராணி, சுரேசன், குகநேசன் (UK), கலைவாணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற விஜயகுமார், ஜெகதாம்பாள் (UK), சண்முகதாஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான நடராசா, தியாகராசா, சிவராசா மற்றும் மகேஸ்வரி (மலேசியா), கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற யாழ் மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர்), சாம்பமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மதனகாமேஸ்வரி, சுந்தரமூர்த்தி (பிரான்ஸ்), ஈஸ்வரி (ஓய்வு பெற்ற பதிவு வைத்தியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிரோசன், சிலோசினி (கனடா), மயூரன், லக்ஷ்மணன் (UK), பிரசன்னா, பிரமியா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பழை கொத்தியால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய உதவி அரசாங்க அதிபர் ஒழுங்கை
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

தகவல் :
Dr. ஈஸ்வரி - சகோதரங்கள்
077 650 9941


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையே இல்லாத இடம்!



பெரியவர் ஒருவர் பல ஆண்டுகளுக்குப் பிறகு தன்னுடைய ஊருக்கு வந்தார். தன் நெருங்கிய நண்பரின் மகன் எப்படி இருக்கிறான் என்பதைக் காண்பதற்காக, அவன் வீட்டுக்குச் சென்றார்.

அவனைப் பார்த்து, "எப்படி இருக்கிறாய்? உன்னைப் பார்த்து பல ஆண்டுகள் ஆகின்றன," என்று கேட்டார்.

கண் கலங்கிய அவன், "இங்கே எனக்கு வாழ்க்கையே போராட்டமாக உள்ளது. சிக்கலுக்கு மேல் சிக்கலான பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன. எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை," என்று புலம்பினான்.

"உன் தந்தையார் போதுமான செல்வம் சேர்த்து வைத்து விட்டுச் சென்றிருக்கிறார். பிறகு உனக்கு என்ன பிரச்சினை?" என்று கேட்டார்.

"பணம் இருந்தால் மட்டும் போதுமா? என் துன்பங்களை நீங்கள் சுமப்பதாகச் சொல்லுங்கள். என் செல்வங்களை எல்லாம் உங்களிடம் தந்து விடுகிறேன்," என்றான். அவனிடம் பேசப் பேச அவன் பரிதாபமான நிலையில் உள்ளான் என்பதை அவர் உணர்ந்தார்.

"துன்பமோ கவலையோ இல்லாத இடம் ஒன்று உள்ளது. நாளை நான் உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன். அங்குள்ள யாரும் துன்பப்படுவதாக எனக்குத் தெரியவில்லை," என்றார்.

"நாளை காலையிலேயே அங்கு செல்லலாமா?" என்று ஆர்வத்துடன் கேட்டான். "செல்லலாம்," என்றார் அவர். மறுநாள் காலையில் அவனை அவர் இடுகாட்டுக்குச் அழைத்துச் சென்றார்.

"எனக்கு தெரிந்து இந்த இடத்தில் உள்ளவர்களுக்குத் தான் எந்தச் சிக்கலும் இல்லை; வாழ்க்கை என்றால் போராட்டங்கள் வரத்தான் செய்யும். அவற்றை வெற்றி கொள்வதுதான் நம் திறமை. கோழைகளைப் போல அவற்றைக் கண்டு அஞ்சினால் மேலும் மேலும் சிக்கல்கள் தோன்றத் தான் செய்யும்," என்றார்.

உண்மையை உணர்ந்த அவன், "ஐயா உங்கள் அறிவுரைக்கு நன்றி. என் வாழ்க்கைப் பேராட்டங்களைத் துணிவுடன் சந்தித்து, அவற்றைத் தீர்க்க முயற்சி செய்வேன். இனிமேல் புலம்ப மாட்டேன்," என்றான்.

அவனுக்குத் தன்னம்பிக்கை ஊட்டிய நிறைவில், அவர் அங்கிருந்து சென்றார்.

# விடுகதைகள்

1. மரத்தின் மேலே தொங்குது, மலை பாம்பல்ல. அது என்ன?
2. முத்தான முத்துக்கள் முற்றத்திலே காயுது. படி போட்டு அளக்கத்தான் ஆளில்லை அது என்ன?
3. அரசன் ஆளாத கோட்டைக்கு பகல் காவல்காரன் ஒருவன், இரவுக் காவல்காரன் ஒருவன் அது என்ன?
4. பேச்சு கேட்குது, பேசுபவர் தெரியவில்லை...
5. நான் பார்த்தால் அவன் பார்ப்பான். நான் சிரித்தால் அவன் சிரிப்பான் அது என்ன?
6. சட்டையை கழற்ற முயன்றால் கண்ணீரும் கம்பலையும்தான் அது என்ன?
7. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ...
8. பாலாற்றில் கறுப்பு மீன் துள்ளி விளையாடுது அது என்ன?
9. வெள்ளை ராஜாவுக்கு கறுப்புச் சட்டை அது என்ன?

**1. விழுது**
**2. நட்சத்திரங்கள்**
**3. சூரியன், சந்திரன்**
**4. வானொலிப்பெட்டி**
**5. கண்ணாடி**
**6. வெங்காயம்**
**7. சரிப்பு**
**8. கண்**
**9. உளுந்து**



## வழிகாட்டுவோம்





# ஐஸ்கிறீம்

கி.பி. 7ஆம் நூற்றாண்டில், சீனாவில் ஐஸ்கிறீம் கண்டுபிடிக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது.

தண்ணீரில் இனிப்பைக் கலந்து உறையவைத்து, பின்னர் அதை துண்டுகளாக்கி பழத்துண்டுகளைக் கலந்து முதலில் ஐஸ்கிறீம்கள் தயாரிக்கப்பட்டன.

குளிர்சாதனப் பெட்டியை கண்டுபிடிப்பதற்கு முன்பு, பனிமலைகளில் இருந்து ஐஸ் கட்டிகளை வெட்டி எடுத்துவந்து ஐஸ்கிறீம்களை தயாரித்து வந்தனர்.

ரோமானிய மன்னர்கள் அடிமைகளை பனிமலைகளின் உச்சிக்கு அனுப்பி, ஐஸ் கட்டிகளைக் கொண்டுவந்து ஐஸ்கிறீம்களை தயாரித்துள்ளனர்.

பனிமலைகளில் இருந்து நகரங்களுக்கு ஐஸ்கட்டிகளை உருகாமல் எடுத்துவருவது சிரமமாக இருந்ததால், முதலில் ஐஸ்கிறீம்கள் அதிக விலையுள்ளதாக இருந்தன.

அமெரிக்க முன்னாள் அதிபரான ஜார்ஜ் வாஷிங்டன், 1790 ஆம் ஆண்டில் ஐஸ்கிறீம் சாப்பிடுவதற்காக 200 அமெரிக்க டாலர்களை செலவழித்துள்ளார்.

செயின்ட் லூயிஸ் நகரில் 1904ஆம் ஆண்டு நடந்த உலகக் கண்காட்சியில் முதல்முறையாக கோன் ஐஸ்கிறீம்கள் அறிமுகமாகின.

அமெரிக்காவில் ஜுலை மாதம், ஐஸ்கிறீம் மாதமாக கொண்டாடப்படுகிறது.

மிகப்பெரிய கோன் ஐஸ்கிறீம் இத்தாலியில் தயாரிக்கப்பட்டது. அதன் உயரம் 9 அடி.

ஆண்டுதோறும் 15 பில்லியன் லீற்றர் ஐஸ்கிறீம் மக்கள் சாப்பிடுகிறார்கள்.



# நல்லூர்

நல்லூர்க் கந்த சாமி கோயில்
நாங்கள் வணங்கும் கோயில்
கல்லுக் கனியக் கசிந்து கதறிக்
கருணை வேண்டுங் கோயில்

அல்லும் பகலும் அடியார் கூட்டம்
அழுதும் தொழுதும் பரவி
நல்லூர்க் கந்தா கந்தா என்று
நயந்து வணங்கும் கோயில்

அழகும் அன்பும் அருளும் தெளிவும்
அமைந்து நிறைந்த கோயில்
முழவும் குழலும் யாழும் பாட்டும்
முழங்கும் நல்லூர்க் கோயில்

ஞான வளமும் நலமும் தவமும்
நண்ணும் நல்லூர்க் கோயில்
வான உலகாய் யாழ்ப்பாணத்தை
மலர்த்தும் நல்லூர்க் கோயில்

எல்லை இல்லா அன்பர் கூடி
இனிய விழாவைக் காணும்
நல்லூர்க் கந்த சாமி கோயில்
ஞாலம் போற்றும் கோயில்

# ஓமன்

மேற்கு ஆசிய நாடுகளில் ஒன்று ஓமன். அழகிய பள்ளத்தாக்கு, மண் வீடுகள், காவற்கோட்டை, பழமையான குகைகள் பலவற்றை உடையது.

இது, அரேபிய தீபகற்பத்தின் தென்கிழக்கு கரையில் அமைந்துள்ளது. வடமேற்கில், ஐக்கிய அரபு அமீரகமும், மேற்கில் சவுதி அரேபியாவும், தென்மேற்கில் யெமனும் எல்லைகளாக அமைந்துள்ளன. தெற்கு மற்றும் கிழக்கில் அரபிக் கடல் உள்ளது.

ஒரு காலத்தில், இந்த இடத்தை போர்ச்சுக்கீசியர் ஆண்டு வந்தனர்; அவர்களை விரட்டி, பெர்ஷியர்கள் ஆட்சியை பிடித்தனர். இந்த பகுதி, ஐரோப்பிய நாடான இங்கிலாந்துடன் தொடர் நட்பில் இருந்தது; ஆனால், காலனியாக மாறியதேயில்லை. இங்கு, 7ம் நூற்றாண்டில் இஸ்லாம் அறிமுகமாகியது. இஸ்லாமியர், 85.9 சதவீதம் வசிக்கின்றனர். இஸ்லாமிய நாடாக, 1996ல் பகிரங்கமாக அறிவித்து கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தினசரி வாழ்வில் கல்லூரி மாணவியோ, இல்லத்தரசியோ பின்பற்றக்கூடிய பேஷன் டிப்ஸ்**

மற்றவர்கள் செய்கிறார்கள் என்பதற்காக நாமும் கண்மூடித்தனமாக ஒரு பேஷனை பின்பற்றக்கூடாது.

ஒவ்வொருவருடைய உடல் அமைப்பும் வேறுவேறு என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நம் உயரம், எடை, தலைமுடியின் அமைப்பு, கண்கள் எப்படி இருக்கின்றன என்று நம்மைப் பற்றி முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதன்பிறகே நமக்கு எந்த உடை பொருத்தமாக இருக்கும், எந்த ஹேயார் ஸ்டைல் நன்றாக இருக்கும் என்று முடிவு செய்ய வேண்டும்.

எனக்கு வசதியாக இருக்கும் ஹை ஹீல்ஸ் இன்னொருவருக்குப் பொருத்தமாக இருக்காது.

பேஷன் என்ற பெயரில் நாம் நேரத்தை வீணாக்கி கஸ்டப்பட்டு செய்வது, கடைசியில் நம்மைப் பெருமைப்படுத்துவதற்குப் பதிலாக கிண்டல் செய்யும் வகையில் ஆகிவிடக் கூடாது. முக்கியமாக, உடைகள் அணிந்த உடன், நமக்கே நம்மீது நம்பிக்கையும் மதிப்பும் வர வேண்டும். நெருடல் இல்லாமல் வசதியாக உணர வேண்டும். தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தாமல், உடைகளும் வசதியாக இல்லாவிட்டால், அந்த நெருடலிலேயே இருப்போம்.

நமக்கே நம்பிக்கை இல்லாதபோது, அழகான உடை கூட எமக்கு அழகற்றவர் போன்ற தோற்றத்தை உருவாக்கிவிடும். நம்முடைய உடல் அமைப்பைப் போலவே, பருவநிலையையும் புரிந்துகொள்ள வேண்டும். வெப்பம் மிகுந்த இடங்களில் குளிர் பிரதேசமான மேற்கத்திய நாடுகளில் பின்பற்றுகிற நாகரிகமுறைகளை அப்படியே நாமும் பின்பற்றுவது பலன் தராது.

பேஷன் என்பது தினமும் மாறிக்கொண்டே இருக்கிறது. அதனால், நிறைய புத்தகங்கள், பேஷன் தொலைக்காட்சிகள் பார்க்க வேண்டும். சினிமாக்களில் பிரபலங்களின் அலங்காரங்களை கவனிக்க வேண்டும். இணையத்தளங்களில் நிறைய வீடியோக்கள் இருக்கின்றன. அவற்றில் இருந்தும் தெரிந்துகொள்ளலாம்.




# பழங்களில் பேசியல் செய்வது எப்படி?

திராட்சையை விதையோடு சேர்த்து மிக்ஸியில் நன்றாக அரைத்து 2 நாள்கள் காற்றுப்புகாத டப்பாவில் போட்டு மூடி வைத்துவிட வேண்டும். 2 நாள்களுக்கு பிறகு திறந்து பார்த்தால் மெல்லிய வெள்ளை ஏடு படிந்திருக்கும். இதற்கு அல்பா ஹைட்ராக்ஸி அமிலம் (Alpha Hydroxy Acid) என்று பெயர். அதை நன்றாக கலக்கி பிரிட்ஜில் வைத்துக் கொள்ளலாம்.

ஒரு சின்ன போத்தலில் ஊற்றி எடுத்துக் கொண்டு பஞ்சால் முகம், கழுத்துப் பகுதிகளில் தடவி 10 நிமிடம் வைத்துவிட்டு, தண்ணீரால் முகத்தை கழுவலாம். வெயிலால் ஏற்படும் கருமையை நீக்கி முகத்துக்கு நல்ல பொலிவைக் கொடுக்கும். திராட்சைச் சாற்றுடன் அரிசி மாவைக் கலந்து முகத்துக்கு அப்ளை செய்யும்போது முகத்தில் உள்ள கரும்புள்ளிகள், கருந்திட்டுகள் நீங்கி, முகம் பளிச்சென்று ஆகும். பட்டர் ஃப்ரூட் என்று சொல்லப்படும் அவகொடா சதைப்பற்றுடன் சிறிது வெண்ணெய், தேன் கலந்து முகத்தில் தடவுவதால், முகத் தோலில் உள்ள வறட்சி நீங்கி, தோலின் முதுமைத் தன்மையைக் குறைக்கும். வாழைப்பழத்தின் தோல் மிகவும் நல்லது. வாழைப்பழத்தோலை ஒட்டியிருக்கும் சதைப்பகுதியுடன், 10 சொட்டு கிளிசரின், கால் டீஸ்பூன் சர்க்கரை கலந்து தோலை அப்படியே முகத்தில் வைத்து தடவி 5 முதல் 10 நிமிடம் வைக்க வேண்டும். இந்த வாழைப்பழ பேஷியல் இறந்த செல்களை நீக்கி, நிறத்தை அதிகப்படுத்தக் கூடியது.

அடுத்து ஸ்ட்ரோபெரியில் என்சைம்கள் அதிகம் உள்ளது. இவை இயற்கையான பிளீச்சிங் ஏஜென்டாக செயற்படுகின்றன. ஸ்ட்ரோபெரியை மிக்சியில் அரைத்து 10 சொட்டு தேன், சோளன் மாவை கலந்து முகத்தில் போடும்போது நல்ல பலன் கிடைக்கும்.

தர்ப்பூசணி பழத்தில் உள்ள விதைகளை நீக்கி, வடிகட்டியில் போட்டு கரண்டி வைத்து மசித்து கிடைக்கும் சாற்றுடன் ஜவ்வரிசி மாவையும் ஒன்றாகக் கலந்து முகம் கழுத்துக்கு தடவினால் நல்ல பளபளப்பையும் கொடுக்கும்.



# பூசணிக்காய் சப்பாத்தி

தேவையான பொருட்கள்:

துருவிய பூசணிக்காய் – 2 கப்

கோதுமை மா – 3 கப்

எண்ணெய் - தேவையான அளவு

உப்பு – தேவையான அளவு

**செய்முறை:**

வாணலியை அடுப்பில் வைத்து, அதில் சிறிது எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், துருவிய பூசணியை சேர்த்து 35 நிமிடம் வதக்கி இறக்க வேண்டும்.

பின் ஒரு பாத்திரத்தில் கோதுமை மா, உப்பு, வதக்கிய பூசணிக்காய் துருவல் சேர்த்து, நன்கு சப்பாத்தி மா பதத்துக்குப் பிசைந்து, 1/2 மணிநேரம் ஊற வைக்க வேண்டும். பின்பு தோசைக்கல்லை அடுப்பில் வைத்து காய்ந்ததும், பிசைந்து வைத்துள்ள மாவை சப்பாத்திகளாக தேய்த்து, கல்லில் போட்டு எண்ணெய் ஊற்றி முன்னும் பின்னும் வேக வைத்து எடுத்தால், பூசணிக்காய் சப்பாத்தி தயார்!

# மீந்துபோன அரிசி சோற்றை அடுத்தநாள் புதிது போல மாற்றுவது எப்படி தெரியுமா?



தமிழர்களால் எது வேண்டுமானாலும் இல்லாமல் இருந்து விட முடியும். ஆனால், ஒரு நாளைக்கு ஒரு முறையாவது அரிசி சோற்றைச் சாப்பிடாமல் இருக்க முடியாது. அந்தளவுக்கு நம் வாழ்க்கையோடு ஒட்டிப் போனது அரிசி சோறு. தினமும் வீடுகளில் நாம் வைக்கும் சோறு, சில நாள்கள் மிஞ்சுவது உண்டு. அதைப் பெரும்பாலும் தண்ணீர் ஊற்றிவைத்து, அடுத்த நாள் பழைய சோறாக சாப்பிடும் பழக்கம் நம்மில் ஏராளமானவர்களுக்கு இருக்கும்.

அதே நேரத்தில் ஒரு நாளுக்கு முன்பு வைத்த சோற்றை, பிரிட்ஜில் வைத்து அடுத்த நாள் பயன்படுத்தவும் நாம் நிறைய முறை முயற்சித்திருப்போம். ஆனால், முதல் நாளில் பூப் பூவாக அவிந்திருந்த அரிசி, அடுத்த நாள் கொட்டை கொட்டையாக மாறிவிடும். அதைச் சாப்பிடுவது அவ்வளவு உவப்பான விஷயமாக இருக்காது.

ஒரு நாள் மீந்துபோன அரிசியை, அடுத்த நாளும் பிரஷ்ஷாக மாற்ற ஒரு சுலபமான வழி உள்ளது. பிரிட்ஜில் இருந்து அரிசியை வெளியே எடுத்தப் பின்னர், அதன் மீது ஒரு ஐஸ் கட்டியை வைத்து, [illegible] சூட்டில் வைக்க வேண்டும். ஐஸ் கட்டி முழுதாக கரைந்து, அரிசி சோற்றை நல்ல [illegible] வைத்திருக்கும். இது சாப்பிடும்போது புதியது போலவே தோன்றும். இந்த டிப்ஸை ஒரு முறை செய்து தான் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா...

சாதாரண கொரோனா வைரஸுடன் அடையாளம் காணப்படுகின்ற தொற்றாளர்களிடமுள்ள வைரஸ் செறிவைக் காட்டிலும், டெல்டாவுடன் அடையாளம் காணப்படுகின்றவர்களின் வைரஸ் செறிவு ஆயிரம் மடங்கு அதிகமாகவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக தொற்றுப்பரவல் வேகமும், பாதிப்பு வீதமும் மிக அதிகமாக இருக்கும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே பொதுமக்கள் குறித்த வைரஸ் தொற்று நிலைமையின் ஆபத்தை உணர்ந்துகொண்டு செயற்படவேண்டும். சுகாதார நடைமுறைகளைத் தவறாது பின்பற்றவேண்டும். உங்கள் ஒவ்வொருவரினதும் உங்கள் குடும்பத்தினரதும் பாதுகாப்பும் உங்கள் கைகளிலேயே உள்ளது என்று சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தி எச்சரித்துவருகின்றனர். (த-இ)

## கொரோனா சாவு...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 2 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 43 பேரில் 17 பெண்களும், 26 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

## தொற்று...

நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 93 ஆயிரத்து 83 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 953 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 65 ஆயிரத்து 708 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## யாழிலும்...

ழந்தார். அதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 118 பேர் கொவிட்19 தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் கொவிட் தொற்றால் நேற்று உயிரிழந்தார்.

குறித்தநபர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் அண்மையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து மருத்துவமனையின் கொரோனா விடுதியில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

எனினும், சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று உயிரிழந்தார்.

வவுனியா ஸ்ரீநகர்பகுதியைச் சேர்ந்த 38 வயதான குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-26,110)

## இரண்டு...

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியானது குறுகிய காலத்தில் ஏற்பட்டதல்ல, அது நீண்டகாலமாக அதிகரித்து வந்த நிலைமையின் பிரதிபலன்.

அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லாத நெருக்கடியே தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையானது அடுத்ததாக தேசிய நிதி பற்றாக்குறையாகவும், தேசிய சந்தையில் வீழ்ச்சியாகவும் மாறும்.

சர்வதேச நிதி தரப்படுத்தல் நிறுவனங்களுக்கு அமைய இலங்கை தற்போது மிகவும் ஆபத்தான நாடுகளுக்கும் கீழே உள்ளது.

அடுத்த நிலைமையானது வங்குரோத்து நிலைமையாகும். மிக விரைவில் ஒரு நாள் இலங்கையின் வங்கித்துறை வீழ்ச்சியடைக் கூடும். இன்னும் இரண்டு மாதங்களில் இலங்கையில் நிச்சயம் பஞ்சம் ஏற்படும். தற்போதைய ஆட்சியாளர்களால் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது" என்றார். (த-22)

## சமாதான...

"விண்ணப்பம் சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் தெளிவான எழுத்துகளில் எழுதிப் பூர்த்தி செய்யப்பட வேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்தும் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அரசமைப்பை மீறியதான இந்தச் செயற்பாட்டைக்கொண்ட புதிய விண்ணப்பப் படிவத்தை நீதி அமைச்சு வழங்கியுள்ளது.

சிங்களம், தமிழ் இரண்டும் நாட்டின் உத்தியோகபூர்வ மொழிகளாக அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. 'தேசிய மொழிகள்'பற்றிய 19 ஆவது பிரிவு 'சிங்களமும் தமிழும் இலங்கையின் தேசிய மொழிகள்'என்று கூறுகிறது. அதில் ஆங்கில மொழி ஒரு துணை மொழியாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இது 'அதிகாரப்பூர்வ மொழி', 'தேசிய மொழிகள்', 'நிர்வாக மொழிகள்', 'சட்ட மொழி' மற்றும் 'நீதி மொழி' ஆகியவற்றின் வகைப்பாட்டையும் கொண்டுள்ளது.

இது தொடர்பாக உத்தியோகபூர்வ மொழி ஆணையத்திடம் விசாரித்தபோது, இந்த நாட்டில் பொதுச் சேவைப் பிரிவினரால் வழங்கப்படும் அனைத்து ஆவணங்களிலும் சிங்கள மற்றும் தமிழ் மொழி என்பன சேர்க்கப்பட வேண்டும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-இ)

## இதுவரை...

ளம் காணப்பட்டுள்ளனர். இந்த 'டெல்டா' தொற்றால் இங்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது." என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த அபாய நிலைமையைக் கருத்திற்கொண்டு மக்கள் அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொழும்பு மாவட்டத்தில் உள்ள கொலன்னாவை, கோட்டை, இரத்மலானை, அங்கொடை, நவகமுவ, கல்கிஸை, கெஸ்பேவ மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் ராகம மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களிலும் 'டெல்டா' தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்தவாரம் களுத்துறை - பேருவளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, தம்புள்ளை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலிருந்து டெல்டா நோய்த்தொற்று உள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதுவரை டெல்டா நோய்த்தொற்று 68 பேரிடம் கண்டறியப்பட்டுள்ளது. அதனால், அதிகமான மக்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இந்த நிலைமை தற்போதைய சோதனைகளிலிருந்து வேறுபட்டது" என்றார். (த-22)

## வாந்தி....

பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஜீவா (வயது 36) என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-159)

## ஜேர்மனியில்...

அங்கு வடக்கு றைன் வெஸ்ட்பாலியா மாநிலத்தில் வசித்துவந்தவரும் மீசாலையைச் சேர்ந்தவருமான இராசரத்தினம் இலக்குமணன் (வயது 36) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 15 ஆம் திகதி அவர் வெள்ளத்தில் சிக்குண்டார் என்பது தெரியவந்துள்ளது.

வீட்டில் தனித்திருந்த சமயம் வெள்ளம் பெருகி வருவது கண்டு அவர் தனது முக்கிய சில ஆவணங்களை எடுத்துக்கொண்டு பாதுகாப்புத் தேடுவதற்காக வீட்டுக்கு வெளியே ஓடிவந்தார் என்றும் அந்தச்சமயம் வெளியே பெருக்கெடுத்த வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட கார் ஒன்றுடன் மோதுண்ட அவர் பின்னர் காணாமற்போனார் என்றும் சம்பவத்தை நேரில்கண்ட சிலர் கூறியுள்ளனர்.

வெள்ளப் பகுதி ஒன்றில் இருந்து மறுநாள் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது. அவரது கையில் பச்சை குத்தி இருந்தமையால் அதன் மூலம் சடலம் அடையாளங் காணப்பட்டது என்ற தகவலை ஜேர்மன் தமிழ் வட்டாரங்கள் வெளியிட்டன.

ஜேர்மனியில் வெள்ளம் பாதித்த மேற்குப் பகுதிகளில் பல தமிழர்களும் சிக்குண்டனர் என்ற தகவல் ஏற்கனவே வெளியாகி இருந்தது.

எனினும், அங்கு நேர்ந்த ஓர் உயிரிழப்பு பற்றிய உறுதிப்படுத்தப்பட்ட முதல் தகவல் இதுவாகும்.

ஜேர்மனியின் அண்மைக்கால வரலாற்றில் ஏற்பட்ட மிக மோசமான இந்த இயற்கை அழிவில் சிக்கிக் காணாமற்போன பலரது உடல்கள் தேடப்பட்டு வருகின்றன. பருவ மாற்றத்தால் ஏற்பட்ட இந்த இயற்கையின் சீற்றம் அங்கு சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாகப் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. (த-இ)

## ஓட்டோவுக்கு...

புக் கம்பிகளுடன் வந்த நால்வரே வீட்டு ஜன்னல்களின் கண்ணாடிகள் மற்றும் முச்சக்கரவண்டியின் கண்ணாடியை உடைத்து முச்சக்கரவண்டிக்கு தீ மூட்டியுள்ளனர். இதனால் முச்சக்கரவண்டி பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

வீட்டுக்காரர் தூக்கத்தில் இருந்தவேளை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும், சத்தம் கேட்டதையடுத்து வீட்டுக்காரர் விழித்துக்கொண்டனர். சம்பவத்தை அவதானித்து அயல்வீட்டாருடன் சேர்ந்து வாள்வெட்டுக் குழுவினரைத் துரத்தியபோதும் வாள்வெட்டுக் குழுவினர் தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணைகள் தொடர்கின்றன என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (த-26,20)

## எண்ணெய்க்...

இலங்கையில் உள்ள எரிபொருள் களஞ்சிய நிலையங்களில் முழுமையாக எரிபொருளை நிரப்பினாலும், ஒரு மாதத்துக்கான எரிபொருளையே சேமிக்க முடியும்.

இலங்கைக்குப் புதிதாக எண்ணெய்க் குதங்கள் அவசியமாகின்றன. திருகோணமலை குதங்களில் 24 குதங்களைப் பெற்றுக்கொள்ள இந்தியாவுடன் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்தியாவுடன் இது குறித்து நீண்டகாலமாக பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டாலும், சாதகமான பதில் கிடைக்கவில்லை. இலங்கையில் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கான எண்ணெயைக் களஞ்சியப்படுத்தும் வசதிகளை உருவாக்கிக்கொள்ள முயற்சிக்கின்றோம். என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

---

# தயாசிறியின் விபத்து திட்டமிடப்பட்டதா?

### அவருடைய கட்சியினர் சந்தேகம்

கொழும்பு, ஜூலை 24

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தனது விபத்து குறித்து சில சந்தேகங்களை எழுப்பியுள்ளார் என்று உட்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்து நடந்த இடத்தைச் சுற்றி சி.சி.டி.வி. காட்சிகள் எதுவும் இல்லை என்றும், மேலும் விசாரணை தேவையில்லை என்றும் கறுவாத் தோட்டம் பொலிஸார் கூறியுள்ளனர்.

ஆனால், அமைச்சர் ஒருவர் எந்த நேரத்தில் விபத்தில் சிக்கியிருந்தாலும் அதை விசாரிக்க பொலிஸாருக்கு ஒரு பொறுப்பு உண்டு. கறுவாத்தோட்டம் பொலிஸாரிடம் விபத்துக் குறித்து விசாரித்தபோது, விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கும் அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றித் தெரியாது என்று கூறியுள்ளார்.

விபத்து குறித்து அமைச்சரிடம் விசாரித்தபோது, விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரிக்கிறார்களா? இல்லையா? என்பது தனக்குத் தெரியாது என்று கூறினார்.

எனினும், அமைச்சர் பயணம் செய்தபோது அவருடன் மெய்க்காப்பாளர்கள் பயணம் செய்யவில்லை என்பதால் திட்டமிட்ட விபத்தாக இருக்கலாம் என்று சந்தேகம் எழுகின்றது என்றும் அவருடைய கட்சி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

கடந்த சில நாள்களாக இராஜாங்க அமைச்சர் அரசை கடுமையாக விமர்சித்து வருகின்ற நிலையில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் உள்ள செயின்ட் பிரிட்ஜெட் மகளிர் பாடசாலை அருகே நடந்த குறித்த விபத்தில் அமைச்சர் நெற்றியில், கைகளில், கால்களில் காயமடைந்துள்ளார். அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று அதேநாளில் வீடு திரும்பியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோக்கியோ ஒலிம்பிக் கோலாகல ஆரம்பம்!





**டோக்கியோ, ஜூலை 24**

**உலகின் மிகப்பெரிய விளையாட்டு விழாவான ஒலிம்பிக் தொடர், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று மாலை கோலாகலமாக ஆரம்பமானது.**

இந்த ஒலிம்பிக் தொடர் 32ஆவது ஒலிம்பிக் தொடராக அமைகின்றது. கடந்த வருடம் நடைபெறவேண்டிய இந்தத் தொடர் கொரோனா காரணமாக பிற்போடப்பட்டு இந்த வருடம் நடைபெறுகின்றது.

ஒலிம்பிக்கின் அதிகாரப்பூர்வ தொடக்க விழா டோக்கியோவில் உள்ள தேசிய அரங்கத்தில் இலங்கை நேரப்படி நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெற்றது.

கண்கவர் கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள், லேசர் ஒளிக்கற்றையால் அந்தரத்தில் மிளிரும் டிரோன் ஜாலங்கள், சிலிர்க்க வைக்கும் வாணவேடிக்கைகள் என்று பிரமாண்டமாக விழா நடைபெற்றது.

ஒலிம்பிக் தீபம் தொடர் ஓட்டமாக அரங்கத்துக்குள் கொண்டு வரப்பட்டு தீபம் ஏற்றப்பட்டதும் ஒலிம்பிக் அதிகாரபூர்வமாக தொடங்கியது. விழாவின் முக்கிய அம்சமாக போட்டியில் பங்கேற்கும் நாடுகளின் அணியினர் தங்களது தேசியக் கொடியுடன் மிடுக்காக அணிவகுத்து வந்தனர். (ம)




## வொஷிங்டன் சுந்தர் காயத்தால் விலகல்

**லண்டன், ஜூலை 24**

இந்திய டெஸ்ட் அணியில் இடம்பிடித்திருந்த சுழற்பந்து வீச்சாளர் வொஷிங்டன் சுந்தர் காயம் காரணமாக தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இந்திய டெஸ்ட் அணி இங்கிலாந்தில் முகாமிட்டுள்ளது. இங்கிலாந்துக்கு எதிராக எதிர்வரும் 4ஆம் திகதி முதல் ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கான வலைப்பயிற்சியின் போது வேகப்பந்து வீச்சாளர் சிராஜ் வீசிய பந்து சுந்தரின் பெருவிரலைத் தாக்கியது. இதையடுத்து சுந்தர் காயமடைந்தார். அவருக்கு ஸ்கான் செய்து பார்த்ததில் கையில் என்புமுறிவு இருப்பது தெரியவந்தது.

அடுத்த 5 வாரங்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், சுந்தர் தொடரில் இருந்து விலகியுள்ளார். (ம)




டோக்கியோவில் ஒலிம்பிக் தொடர் கோலாகலமாக ஆரம்பமான அதேநேரத்தில், ஒலிம்பிக் கிராமத்துக்கு வெளியே ஒலிம்பிக் தொடர் கைவிடப்பட வேண்டும் என்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கொரோனா தீவிரமாவதை கருத்தில்கொண்டே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம)


### கார் விற்பனைக்குண்டு

MITSUBISHI (Japan) கார் விற்பனைக்குண்டு.
விலை : 3,50,000 மட்டும் 077 323 9317

### வேலையாள் தேவை

எமது நிறுவனத்திற்கு **கணினி அறிவுடைய பெண் எழுதுவினைஞர்** தேவை.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
வயது எல்லை: 20 - 40 வரை
நேரில் சமுகமளிக்கவும்
தொடர்பு: 077 993 4252, 077 723 8573

### உடனடி வேலைவாய்ப்பு

01. வரவேற்பாளர் (Receptionist) - பெண்
02. பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் - பெண் (Public Relation Officer - PRO - Female )
03. இரவுநேர நோயாளர் காவு வண்டி சாரதி (Night Ambulance Driver)
04. தொழில்நுட்பவியலாளர் (Technician Electrical/Plumping)
05. ஆய்வுகூட உதவியாளர் (Lab Assistant)
06. தாதிய உதவியாளர் (Nursing Assinstant)

நேர்முகப் பரீட்சை
இடம் : சன்றைஸ் மெடி கிளினிக்
திகதி : 25/07/2021 - ஞாயிறு
நேரம் : காலை 8 மணி - 10 மணி வரை
தொடர்பு : 021 222 6069, 021 222 8013
சன்றைஸ் மெடி கிளினிக் (யாழ் பஸ் நிலையம் முன்பாக)
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### ஆங்கிலம்

அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கே வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு : 077 658 9443
யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்



### திருமதி இளையதம்பி யோகசவுந்தரி

**- இளைப்பாறிய ஆசிரியர் -**

**( ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவிலடி, தண்ணீரூற்று, முல்லைத்தீவு )**

தண்ணீரூற்று முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால், கொழும்பு மற்றும் தண்ணீற்றை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி இளையதம்பி யோகசவுந்தரி** அவர்கள் நேற்று (23.07.2021) வெள்ளிக்கிழமை தண்ணீரூற்றில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தண்ணீரூற்று கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் சிவன் கோவிலடி ஆவரங்கால் புத்தூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் மூத்த மருமகளும், அண்மையில் காலமான வேலுப்பிள்ளை இளையதம்பி (இளைப்பாறிய C.T.B Depot Manager - முல்லைத்தீவு) அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் அனுசுயா (கொழும்பு), அஜந்தீபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் டாக்டர் சுதர்சன் (கொழும்பு), அர்ச்சனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் அட்சயா, ஆருண்யா (கொழும்பு), ஆரோஜிகா, ஆகாஷ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ஜெகசவுந்தரி (ஆசிரியை), ஜெகதீஸ்வரன் (பரன்), காலஞ்சென்ற சுசீலாதேவி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை தம்பிநாதன், கந்தசாமி (Retired Deputy Auditor General), சிவசுந்தரம் (இளைப்பாறிய வரி அலுவலர் - லண்டன்), சோதிநாதன் (இளைப்பாறிய ஆசிரியர் - தண்ணீரூற்று), காலஞ்சென்ற தர்மராஜா (தண்ணீரூற்று), தவமணிதேவி (தண்ணீரூற்று) ஆகியோரின் மைத்துனியும் நாகேஸ்வரி (கொழும்பு), அருளேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சகலியும் கனகசிவம் (UK), கனகேஸ்வரி (ஆவரங்கால்), யோகசிவம் (UK), இராசசிவம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.07.2021) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தண்ணீரூற்றில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜெகதீஸ்வரன் (பரன் ) - 0094 777 07 2081 - சகோதரர்**
**கந்தசாமி ( Colombo ) - 0094 71 534 9150 - மைத்துனர்**
**Dr.அனுசுயா ( Colombo ) - 0094 773 41 7640 - மகள்**
**அஜந்தீபன் (கனடா ) - 00 1416 731 3458 - மகன்**
**சிவசுந்தரம் ( லண்டன் ) - 0044 772 556 7007 - மைத்துனர்**

**தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.